Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

இலவசப் பிரதி

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–27 | 11–07–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –144




# கல்வி தொடர்பான ஆய்வுகளைச் செய்வது வருங்காலத்திற்கு உந்து சக்தியாக அமையும்

## கல்வி தொடர்பான ஆய்வுப் பட்டறையில் சு.ப.தமிழ்ச்செல்வன்

எமது எதிர்காலக்கல்விக்கொள்கை சம்பந்தமாகவும், சமகாலக் கல்வியிலே இருக்கின்ற குறைபாடுகள் சம்பந்தமாகவும் ஆய்வுகளைச் செய்வது, தீர்வுகளை எட்டுவது இனி வரும் காலங்களுக்கு ஒரு உந்துசக்தியாக அமையும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

'தமிழரின் கல்வித் தேவையும் இன்றைய நிலையும்'எனும் ஆய்வுப்பட்டறையின் இரண்டாம் நாளான நேற்று உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; கல்வியும், மொழியும் பண்பாடும், நிலமும் ஒரு இனத்தின் கட்டமைப்பைத் தாங்கி நிற்கின்ற தூண்களாக இருக்கின்றன. ஆகவே எங்களுடைய கல்வியை எவ்வளவு தூரம் சிங்கள இனவாதத் தலைமைகள் பலவீனப்படுத்த முடியுமோ அதற்காக நீண்டகாலமாக முயன்று வந்திருக்கிறார்கள். எனவே, கல் விக்கு ஏற்படுத்தப்பட்ட அடக்கு முறையின் மூலம்தான் எமது போராட்டம் ஆரம்பமானது என்பதையும் நீங்கள் அறி வீர்கள். இன்று எங்களது போராட்டம் மிக உச்ச தியாகங் களுக்கூடாக சர்வதேச மயப்பட்டு நிற்கின்றது. எங்களுடைய உரிமைக்குரல்களை உரிமைப் போராட்டத்தினுடைய பக்கங்களை இன்று சர்வதேச சமூகம் திரும்பிப்பார்க்கின்ற ஒரு நிலையை எங்களுடைய தேசியத் தலைவர் ஏற்படுத்தியிருக்கிறார். இன்று நாங்கள் கௌரவமாக நிமிர்ந்து நிற் கின்றோம். எங்களுடைய உரிமைகளை முழுஅளவில் பெற்றுக் கொண்டு ஒரு நிறைவான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். ஆனால் முழுமை அடையவில்லை எனினும் அதை நோக்கிச் செல்வதற்கான தார்மீகப்பலம் எங்களுடைய தேசியத் தலைவரின் காலத்திலே கிடைத்திருக் கின்றது. அந்த சந்தர்ப்பத்தை நாங்கள் அனைத்து வழிகளிலும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைக்கான தேர்தல் முடிவுகள்

# தேர்தல் நடந்த ஆறு மாகாண சபைகளையும் ஐ.ம.சு.முன்னணி கைப்பற்றும் வாய்ப்பு!

## வெளியான முடிவுகள் ஆளும் கட்சிக்குச் சாதகம்

**ஆறுமாகாணசபைகளுக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் அதிகாலை 3.00 மணிவரை வெளிவந்த மாவட்டரீதியான இறுதி முடிவில் அம்பாந்தோட்டை மாவட்டத்தை ஆளும் கட்சி கைப்பற்றியது. தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் அனைத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னிலையில் உள்ளது. ஏனைய தேர்தல்தொகுதி ரீதியான முடிவுகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியே அதிகவாக்குகளைப் பெற்றிருக்கிறது.**

வடக்கு- கிழக்கு மாகாண சபை, வடமேல் மாகாண சபை தவிர்ந்த 6 மாகாண சபைகளுக்கும் ஊவா, மத்திய, சப்ரகமுவ, வடமத்திய, மேல மற்றும் தென்மாகாண சபைகளுக்கென நடந்த தேர்தல்முடிவுகளே தற்போது வெளியாகிக்கொண்டிருக்கின்றன. நேற்றைய தேர்தலின் போது மதியம் வரை வாக்களிப்பு மிக மந்தமாகவே இருந்தது. மதியத்திற்குப் பின்னர் ஓரளவு வாக்களிப்பு சுறுசுறுப்பாக இருந்த போதும் வாக்களிப்பு வீதம் மிகக் குறைவாகவே இருந்தது. தேர்தல் வன்முறைகள் குறைவாகவே இருந்த தெனத் தெரிவிக்கப்படுகின்றபோதும் தேர்தல் சட்டத்தை மீறியதாகக் கூறி 42 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# காந்தரூபன் அறிவுச்சோலை வளாகத்தில் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்!

(அலுவலகசெய்தியாளர்)

மேஜர் காந்தரூபனின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் காந்தரூபன் அறிவுச்சோலை அமைய இருக்கும் புதிய வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது.

இதன் போது காந்தரூபன் அறிவுச்சோலைக்குரிய புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்வும் இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வாக மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன்கொலின்ஸ் ஆகியோரின்

(14ஆம் பக்கம் பார்க்க)





# ரி.பி.சி.யின் பொய் பிரசாரத்திற்கு விடுதலைப்புலிகள் கண்டனம்

தமிழ் தேசவிரோத சக்திகளால் லண்டனில் இருந்து ஒலிபரப்பப் படும் ரி.பி.சி ஒலிபரப்பினை சிறிலங்கா அரசு தனது ஊடகமான தென்றல் ஒலிபரப்பு ஊடாக ஒலி பரப்பு செய்து வருவதும், தற்போது சமாதானத்தைப் பாதிக்கும் வகையில் பொய்யான செய்திகளை ஒலிபரப்புவதும் சமாதானத்தைப் பாதிக்கச் செய்துள்ளது என நேற்று மட்டு அம்பாறை அரசியல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஹிங்குராங்கொட விகாரை மீதான தாக்குதலில் காயமடைந்த பிக்கு மரணம்

## இரு பிக்குகளைக் காணவில்லை

பொலநறுவ ஹிங்குராங்கொட விகாரை மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டொன்று வீசப்பட்ட வேளை படுகாயமடைந்திருந்த பிக்கு கலிகமுவே சுகபால தேரர் (89 வயது) நேற்று மரணமானார். கடந்த புதன்கிழமை ஹிங்குராங் கொடவிகாரை மீது இனந்தெரியாதோ மேற்கொண்ட குண்டுத் தாக்குதலின்போது இவர் படுகாயமடைந்து பொலநறுவை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் கொழும்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் குருநாகல் வீதியிலுள்ள

# பௌத்த விகாரை பிரதம சங்கநாயக்கர் கொல்லப்பட்டு விகாரையுடன் எரிப்பு

பௌத்த விகாரையின் பிரதம சங்கநாயக்கர் ஒருவர் கொலை செய்யப்பட்டு விகாரைக்குள் தீயிட்டு கொழுத்தப்பட்ட சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. புத்தளம் குருநாகல் வீதியில் அமைந்துள்ள குளக்கட்டுவ ஸ்ரீ மங்களராமய விகாரையின் விகாராதிபதி சந்தாசீல ஹமி என்பவரே கொலைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது. இவரைக் கொலை செய்த சந்தேக நபர்கள் இவருடன் சேர்த்து விகாரைக்கும் தீயிட்டுக் கொழுத்தியிருப்பதாகவும் புத்தளம் பொலிசார் தெரிவிக்கின்றனர்.இந்தக் கொலைச்சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் தொடர்பான விபரங்களை பொலிசார் திரட்டி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(32)

## வரிவிளம்பரம்

### கருத்தரங்கு

ஆசிரிய தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான இறுதிச் செயலமர்வு 17.07.2004 (சனி-காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை)அன்று கிளிநொச்சிடிப்போ வீதியில் அமைந்துள்ள கேம் பிறிஜ்கல்லூரியில் நடைபெறும் கட்டணம் 150/= (4630)

### N.E.C.

A-9வீதி,கிளிநொச்சி. ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்குரிய வகுப்புக்கள் கொழும்பு, யாழ் விரிவுரையாளர்களால் நடைபெறஇருக்கின்றது. முன் அனுமதி பெறவும். நிர்வாகம்.(4803)

### N.E.C.

A-9 வீதி, கிளிநொச்சி. A/L Day Class சகல பாடங்களும் பட்டம்பெற்ற தனித்துவமான ஆசிரியர்களால் 12.07.2004 ஆரம்பம். நிர்வாகம். (4803)

### போட்டிப்பரீட்சை

ஆசிரியர் தெரிவுப்போட்டிப் பரீட்சைக்கான பயிற்சிவகுப்புக்கள் வார நாட்களில் மாலை 5.00 - 6.00 வரையும் வார இறுதி நாட்களில் காலை9.00-12.00மணி வரையும் வவுனியா புகையிரத நிலையத்திற்குமுன்பாகஇயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில்நடைபெறும். (4635)

### தவறிவிட்டது

சிவனுபெரியான் ஆகிய எனது போ.வ.க.பிரிவினால் வழங்கப்பட்ட குடும்ப அட்டை 08-07-2004 (வியாழக்கிழமை) கைவேலிக்கும் கோம்பாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில்ஒப்படைக்கவும்(4663)

### மீட்டல் வகுப்பு (2005 A/L)

உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில் நடைபெறுகின்றது. (4634)

### காணிவிற்பனைக்குண்டு

மாங்குளம், துணுக்காய் வீதியில் வன்னிவிளாங்குளம், முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அண்மையில் 10ஏக்கர் காணி பெரிய கிணற்றுடன் நெற்செய்கைக்கு ஏற்ற குளத்து நீர்ப்பாசனக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- சி.சத்தியமூர்த்தி, சத்தியவாசா, ஆஸ்பத்திரி வீதி , சங்கானை. (4128)

-16 தமிழ் இளைஞர் காணாமற்போன சம்பவத்துடன்-

# சம்பந்தப்பட்ட படை அதிகாரியை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

தென்மராட்சியின் கைதடி நாவற்குழிப்பகுதியில் 1996 மற்றும் 1997ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டு காணாமற் போன சம்பவம் தொடர்பில் இராணுவஉயர்அதிகாரி ஒருவரைச் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் எச்சரித்து உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் கைது செய்யப்பட்டு காணாமற் போன 16 தமிழ் இளைஞர்களது ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது. குறித்த 16தமிழ் இளைஞர்களையும் அப்போது கைது செய்து அழைத்து சென்றிருந்ததாகக் கூறப்படும் இராணுவ அதிகாரியான துமிந்த ஹெப்பெற்றிக்கொல இவ் ஆட்கொணர்வு மனுக்களில் முதலாம் எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

தற்போது பலாலி இராணுவத் தளத்தில் உயரதிகாரியாகக் கடமையாற்றி வரும் இவர் நீதிமன்ற அழைப்பாணையைப் புறக்கணித்து நீதிமன்றில் கடந்த 6மாதங்களுக்கு மேலாக ஆஜராகாது இருந்து வந்திருந்தார்.

எனினும் இராணுவச்சட்டத்தரணியான கப்டன் குறூப் இதுவரை காலமும் இவர்கள் சார்பில் ஆஜராகியிருந்தார். இந்நிலையில் வெள்ளியன்றும் குறித்த படை உயரதிகாரி நீதிமன்றில் ஆஜராகததையடுத்து விசாரணைகளை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான் பா. சுப்பிரமணியம் அன்றையதினம் முதலாம் சந்தேக நபரான குறித்த இராணுவ உயரதிகாரியை எச்சரித்துள்ளதோடு நீதிமன்றில் ஆஜராக பணித்துள்ளார். (27)

-கரும்புலிகள் நாளை முன்னிட்டு-

# திருமலையில் காவல்துறையினரால் பாடசாலையில் சிரமதானப் பணி

திருகோணமலை மூதூர் கிழக்கு பிராந்தியத்தில் நல்லூர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கரும்புலிகள் தின நிகழ்வை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட தமிழீழ காவல் துறையினரால் கடந்த 4ஆம் திகதி சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வில் திருகோணமலை காவல்துறையின் கண்காணிப்பாளர் கா.சிரஞ்சீவி அவர்களும் சம்பூர் காவல் பணிமனைப் பொறுப்பாளர் ச.தேவதாஸ் அவர்களும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

மேலும் இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர். இதில் பாடசாலை அதிபர் உரை நிகழ்த்துகையில், இப்பணியானது பாடசாலைக்கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலைஅபிவிருத்திக்கும் உறுதுணையாக அமைவதுடன் சமூகத்திற்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்தார்.

# முள்ளியவளைப் பிரதேசத்தில் நெற் பயிரில் சிற்றுண்ணித்தாக்கம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் உள்ள முறிப்பு வெளியில் சிற்றுண்ணித்தாக்கம் (மைற்ஸ்) அவதானிக்கப்பட்டுள்ளது. இது நெற் பயிரில் இருந்து சாற்றை உறிஞ்சி உட்கொள்வதால் பயிர் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி வருவதையும், தொடர்ந்து இலை கருகி இறப்பதையும் அவதானிக்க முடியும்.

இதன் தாக்கம் ஏற்ப[illegible] வயலில் நெற்பயிர்கள் [illegible]ட்டம் தொட்டமாக மஞ்சளாக மாறுவதையும் காணலாம். இதன் தாக்கம், மைற்ஸ் உடைய குடிப்பெருக்கம் சிறுபோகத்தில் வெப்பநிலை கூடிய காலத்தில் அதிகம் என்பதால் வயலை நன்கு அவதானிக்கும் படி விவசாயிகள் வேண்டப்படுகின்றனர்.வயலில் தாக்கம் காணப்பட்டால் சல்பர் எனும் நாசினியை 1அவுன்ஸ் 2கலன் நீரில் கலந்து இலைகள் நன்கு நனையும்படி விசிறவும். மேலதிக விபரங்களுக்கு அவ்வப் பகுதி விவசாயப்போதனாசிரியரை நாடி ஆலோசனைபெறும்படி உதவி விவசாயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (20)

### கண்டெடுப்பு

தருமபுரத்தைச் சேர்ந்த கலைச்செல்வன் நிசாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை இல840563324V மற்றும் கொமேசல் வங்கி கிராடிட்காட் உடன் பேஸ் ஒன்று தருமபுரத்தில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் அலுவலகநேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## விதையாகிய உன் நினைவுகளுடன்

அரும்பாக | விதையாக

26 - 05 - 1968



11 - 07 - 1991

### கப்டன் அமுதினி

(சிவசுப்பிரமணியம் அமுதினி)

முன்னாள் தென்மராட்சி,
மன்னார் மாவட்ட மகளிர்
முன்னணிப் பொறுப்பாளர்

களம் பல கண்டு
கல்லறையில் உறங்கும் - உன்
கனவு நனவாகும்
தூரம் அதிகமில்லை...

த.முகவரி
7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(சி-10011)

குடும்பத்தினர்,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

# சாவு அறிவித்தல்

தோற்றம்

06 - 07 - 1982



மறைவு

05 - 07 - 2004

## செல்வன். இராமச்சந்திரன் சந்திரபோஸ்

(கொழும்பு இந்துக்கல்லூரியின் பழையமாணவன்
கணினி,பொறியியற்றுறை இறுதியாண்டு மாணவன்.)

இல.719, சிவிக்ஸ் சென்ரர், வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் இராமச்சந்திரன் சந்திரபோஸ் 05.07.2004 திங்கட்கிழமையன்று கொழும்பில் அகாலச்சாவடைந்தார். இவர் ப.இராமச்சந்திரன் (அதிபர், பன்னங்கண்டி இந்து தமிழ் வித்தியாலயம்), சரோஜினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வனும்; சந்திரப்பிரபா (டென்மார்க்), சந்திரப்பிரியா (கிளி/பாரதிபுரம் வித்தியாலய ஆசிரியை), சந்திரலேகா (கெயார் நிறுவன நிர்வாக உத்தியோகத்தர், முழங்காவில்), சந்திரிக்கா (இராமநாதன் நுண்கலைப்பீட 3 ஆம் வருடமாணவி), சந்திரராஜ் (கிளி/மத்தியகல்லூரி உயர்தரமாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்; அருள்தண்சன் (டென்மார்க்) அவர்களின் அன்பு மைத்துனனும் லெயாக்கா (டென்மார்க்), வீப (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்; காலஞ்சென்ற பரமநாதன் ஆச்சிமுத்து, காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் காமாட்சியம்மா தம்பதிகளின் பாசமிகு பேரனும்; சிவபாலச்சந்திரன், நாகேஸ்வரி (லண்டன்), தனபாலச்சந்திரன், சுசீலாதேவி (ஜேர்மனி), பூபாலச்சந்திரன் சகுந்தலாதேவி (லண்டன்), ரவிச்சந்திரன் (லண்டன்), பரதன் சுப்பிரமணியம், கமலாதேவி (லண்டன்), சாமுவேல், புஸ்பராணி (கண்டி றோ.க.பாடசாலை ஆசிரியை), இலகுப்பிள்ளை ரதிதேவி (கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியை), ஆகியோரின் பெறாமகனும்; சந்திரமோகன் கமலாதேவி, ஆனந்தராசா வள்ளியம்மை, நந்தகுமார் யோகேஸ்வரியம்மா, ஆறுமுகநாதன் பரமேஸ்வரி (கிளி/கனகபுரம் மகா வித்தியாலய ஆசிரியை), மோகனராசா வளர்மதி (எழுதுவினைஞர், கூட்டுறவுத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பன்னங்கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
ப.இராமச்சந்திரன் - (தந்தை)
(கிளி/பன்னங்கண்டி இ.த.க.பா.அதிபர்)

(4809)

# ஈராக் விவகாரத்தில் சீ.ஐ.ஏ.தவறிழைத்துவிட்டது அமெ.செனற் விசாரணைக் குழு குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

**ஈராக் விவகாரத்தில் தவறான ஆதாரங்களின் அடிப்படையில் அமெரிக்க உளவுத்துறை செயற்பட்டுள்ளதாக அந்நாட்டு செனற் சபை உறுப்பினர்களைக் கொண்ட குழு குற்றம் சாட்டியுள்ளது.**

ஈராக்மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கையை மேற் கொண்ட விவகாரத்தில் அமெரிக்க உளவு நிறுவனமான சீஐ. ஏ. நடந்து கொண்ட விதம் குறித்து அமெரிக்க செனற் சபை உறுப்பினர்கள் கொண்ட குழு கடந்த ஒருவருடமாக ஆய்வுகளை மேற்கொண்டிருந் தனர் இதுகுறித்த அறிக்கையை தற்போது செனற்சபை உறுப்பினர் களைக் கொண்ட குழு தாக்கல் செய்துள்ளது.

ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங் கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் எதனையும் சீ.ஐ.ஏ. அரசாங்கத் திடம் தெரிவித்திருக்கவில்லை யென விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக செனற் குழுவின் தலைவர் தெரிவித் துள்ளார்.

செனற் குழுவின் விசாரணை அறிக்கை குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க உளவுத துறை (சீ.ஐ.ஏ) இயக்குனர் ஈராக்கிய விவகாரத்தில் சீ.ஐ.ஏ. தரப்பில் குறைபாடுகள் இருந்துள் ளதை ஒப்புக்கொண்டுள்ளார்.

இதேவேளை இந்த அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த அமெ ரிக்க சனாதிபதி ஜோர்ஜ்- டபிள்யூ புஷ் இந்த அறிக்கையை தான் இன்னும் படிக்கவில்லையெனக் கூறியுள்ளார்.

வரும் நவம்பர் மாதம் நடைபெற வுள்ள அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் ஈராக் விவகாரமும் அது குறித்த செனற் குழுவின்விசாரணை அறிக்கையும் தாக்கத்தை ஏற்படுத் துமென ஆய்வாளர்கள் தெரிவித்துள் ளனர்.

-எகிப்திய பிரதமர் பதவி விலகல்-

# அமைச்சர் நாஸியிடம் அரசமைக்கக் கோரிக்கை

(கெய்ரோ)

எகிப்திய அரசாங்கத்தில் பிரதம மந்திரியாக பதவி வகித்த 72 வயதுடைய ஓபைட் நேற்று முன்தினம் பதவி விலகியுள்ளார்.

இதன் காரணமாக தகவல்துறை அமைச்சரான அகமட் நாஸி புதிய அரசாங்கமொன்றை அமைக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்.

ஜேர்மனியில் சிகிச்சைகளை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய எகிப்திய சனாதிபதி குஷைன் முபாரத் நாஸியை அழைத்து புதிய அமைச்சரவையை அமைக்கும்படி கேட்டுள்ளார்.

52 வயதுடைய நாஸி கனடாவில் படித்து கணினித்துறையில் விசேட பட்டம் பெற்றவராவார்.இவர் 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒன்பது வருட காலத்திற்கு அமைச்சரவையின் தகவல் நிலையத்தின் தலைவராக வும், 1990ஆம் ஆண்டிலிருந்து தகவல்துறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளமை குறிப்பி டத்தக்கது.

# ஆப்கானில் சனாதிபதித் தேர்தல் உலகத் தலைவர்கள் வரவேற்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி நடைபெற வுள்ளதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை பாராளுமன்றத் தேர்தல் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தேர்தல்கள் தொடர்பாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்ட பிள்யூ புஷ் கருத்து வெளியிடு கையில்;

இரண்டு தேர்தல்களை ஆப்கா னிஸ்தான் நடத்துவது அந்நாடு சனநாயகத்தை நோக்கி முன்னேறிச் செல்வதைக் காட்டுகின்றதென்று தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனானும் ஆப் கானிஸ்தானி() நடைபெற விருக்கும் இரண்டு தேர்தல்களுக் கான திகதிகள் குறிப்பிடப் பட்டுள்ளதை வரவேற்றுள்ளதுடன், சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்கள் ஆப்கானிஸ்தானில் நடைபெறவிருப்பது வரவேற்கப்பட வேண்டுமென்றும் இச் சந்தர்ப்பத் தில் அந்நாட்டு அரசாங்க மும்,சர்வ தேச சமூகமும் இரண்டுப டக்கூடா தென்றும் மேலும் தெரிவித் துள்ளார்.



சான்சல்வடோருக்கண்மையிலுள்ள பிரான்சிஸ்கோ கரும்புத்தோட்டத் தில் வேலை செய்யும் ஜோஜெஸ்றிவற என்ற 12 வயதுச்சிறுவனும் அவனது சகோதரனும் வேலை செய்துவிட்டு ஓய்வெடுத்திருக்கின்றனர். இங்கே 5000 சல்வடோர்ச் சிறுவர்கள் வேலை செய்கின்றனர். மனித உரிமை அவதானிப்பாளர்கள் இக்கம்பனிகளை, இச்சிறுவர்களை வேலையிலிருந்து நிறுத்தும்படி கேட்டுள்ளனர்.

# தமது கொள்கைக்கு ஒத்துழைப்பு வழங்!க சிங்கப்பூர் பிரதமர் இந்.பிரதமரிடம் கோரிக்கை

(புதுடில்லி)

கீழைத்தேய நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் தனது கொள்கைக்கு இந்தியா ஒத்து ழைப்பு வழங்க வேண்டுமென்று இந்தியாவிற்கு வந்துள்ள சிங்கப் பூர் பிரதமர் இந்தியப் பிரதமரைக் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசிய போதே அவர் இந்த வேண்டு கோளைவிடுத் துள்ளார்.

அச்சந்திப்பின் போது பொருளா தார மற்றும் அரசியற் பணிகளில் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை அதிகரிப்பது குறித்தும் இருதலைவர்களும் கலந்துரை யாடியுள்ளனர்.

இதன்போது இந்தியாவின் முதலீடுகளை விஸ்தரிக்க தமது நாடு விருப்பம் கொண்டுள்ளதாக சிங்கப்பூர் பிரதமர் கூறியுள்ளார்.

இதேவேளை சிறப்பாக இந்தியா-சிங்கப்பூருக்கிடையிலான விவகாரங்களும், ஆசியா மற்றும் கிழக்காசியா ஆகிய நாடுகளுக் கிடையிலான உறவுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதுடன் இது தொடர்பான கூட்டறிக்கை ஒன்றை யும் வெளியிட்டுள்ளனர்.

# கடன் வழங்க இணக்கம்

(வோஷிங்டன்)

காசநோய், எயிட்ஸ் உள்ளிட்ட பல்வேறு நோய்களின் தாக்குதல் குறித்து ஒருங்கிணைந்த கண்காணிப்புத் திட்டத்திற்கென உலகவங்கி இந்தியாவுக்கு 13கோடியே 60 இலட்சம் டொலர்களைக் கடனாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இதனை வோஷிங்டனில் உலகவங்கி அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# ஏழை மூதாட்டிக்கு அமெ.இல் மூவாயிரம் கோடி ரூபா பரிசு

(வோஷிங்டன்)

அமெரிக்காவைச் சேர்ந்த ஏழை மூதாட்டி ஒருவருக்கு அதிஷ்ரலாப சீட்டிழுப்பில் 3000 கோடி ரூபாய் பரிசு கிடைத்துள்ளது.அமெரிக்காவில் துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டுவரும் 68 வயது மூதாட்டிக்கே 3000 கோடி ரூபாய் அதிஷ்ரலாப சீட்டிழுப்பில் கிடைத்துள்ளது.

அமெரிக்க நகர் மாசாசூ செக்கில் வாழ்ந்து வந்த இந்த மூதாட்டி ஜிராத் வில்லியம் அண்மையில் ஆறு அதிஷ்ரலாபச் சீட்டுக்களை வாங்கியிருந்தார்.இவற்றில் ஒரு சீட்டிற்கு கடந்த வாரம் குலுக்கலில் மூவாயிரம் கோடி கிடைத்துள்ளது. இந்தப் பணத்தைக் கொண்டு பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாக மூதாட்டி பேட்டியில் கூறியுள்ளார்.



கியூபாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட வீதியொன்றின் ஊடாக ஒருவர் சவாரி செய்கின்றார்.

# நால்வர் பலி

(புதுடில்லி)

ஜம்மு- காஷ்மீரில் பூஞ் மாவட்டத்திலுள்ள இராணுவ முகாமொன்றை நேற்று முன்தினம் இரவு தாக்கமுயன்ற தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்பு படையினருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் இராணுவவீரர் ஒருவரும்,மூன்று தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஜம்மு- காஷ்மீர் இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இராணுவத்தினரின் முகாமை தீவிரவாதிகள் கைப்பற்ற முயற்சி எடுத்ததாகவும், அதனைப் பாதுகாப்புப் படையினர் முறியடி த்து விட்டதாகவும் கூறப்படுகின் றது.



கலிபோர்னியாவிலுள்ள வடக்கு புளோரிஸ்டான் சியாரமலைத் தொடரில் 50ஏக்கருக்கு மூண்ட காட்டுத்தீயினை அணைக்க தீ அணைக்கும் ஹெலிகப்டர் நீரை ஊற்றுகின்றது.

# ஆபிரிக்காவில்அமைதிப்பணிக்கு இந்தியாவின் புதிய இராணுவ அணி

(புதுடில்லி)

ஆபிரிக்காவில் உள்ள எதிபோப்பியா, எரித்திரியா ஆகிய நாடுகளில் ஐ.நா. அமைதி காக்கும் பணியில் ஈடுபட 700 இராணுவ வீரர்கள் கொண்ட புதிய அணியை இந்தியா அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அப்பகுதிகளில் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டு பணியில் ஈடுபட்டு வரும் 15 ஆவது தரைப்படைக் குழுவிற்குப் பதிலாக 13 ஆவது முகாம் படைப் பிரிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியப் படைகள் கடந்த மூன்றாண்டு காலமாக அப்பகுதிகளில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சேது சமுத்திரத்திட்டத்தால் மன்னார் வளைகுடாவில் உயிரியற் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாது பார்க்கப்படும்

-இந்திய அமைச்சர் ரி.ஆர்.பாலு தெரிவிப்பு

சேது சமுத்திரத் திட்டத்தை செயற்படுத்தும் போது மன்னார் வளைகுடாப் பகுதியில் உயிரியற் சூழலுக்கு எந்தவித பாதகமும் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துஅமைச்சர் ரி.ஆர் பாலு நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் உறுதியளித்துள்ளார்.இந்தக் கால்வாய்த் திட்டத்தில் அமையவுள்ள இணைப்புகள் சுற்றுச் சூழலைப் பாதிக்காதவாறு மாற்றியமைக்கப்படும் என்று கூறியுள்ளார்.40 கோடி டொலர் செலவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சேது சமுத்திரத்திட்டம் மூன்று வருடங்களில் முடிவடையும் என்றும் அமைச்சர் ரி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.



# எமது போராட்டத்தின் திருப்புமுனைகளுக்கு மாவீரர்களின் மகத்தான தியாகமே காரணம்

## வெளியீட்டு நிகழ்வில் கேணல் சூசை

(அலுவலக செய்தியாளர்)

நாம் இன்று சமாதானச் சூழ் நிலையில் வசித்துக்கொண்டு இருக்கின்றோம் என்றால் அதற்குப் பின்னணியாக ஆணிவேராக இருப்பவர்கள் எமது மாவீரர்களே ஆகும். இவர்களது மகத்தான சேவைகளையும்,தியாகங்களையும் போராட்ட காலங்களில் உடனுக்கு டன் எடுத்துக்காட்ட முடியாவிட்டா லும் காலம் கடந்து இன்றைய நாளில் அவர்களின் தியாகங்களை ஒளிப்பேழைகள் மூலமும்; ஒலி நாடாக்கள் மூலமும் வெளியீட்டு வைப்பதன் மூலம் இந்த கரும்புலி மாவீரர்களின் தியாகங்கள் வெளிக் கொண்டு வரப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வாறு நேற்று முன்தினம் இடம்பெற்ற கரும்புலிகள் இசைத் தட்டு வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கடற்புலி களின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

அன்று வலிகாமத்தைப் பிடித் துச் சிங்கக் கொடியை யாழ் நகரில் ஏற்றியபோது அதற்குப் பதிலடியாகத்தான் கொழும்புத் துறைமுகத்துக்குள் கரும்புலிகள் சென்று அவர்களின் மையப்பகுதி யினுள் 9 கரும்புலிகள் வெடித்து சிங்கள இனவாதிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வரலாற்று வெற்றிகளை நிலைநாட்டினர்.

97ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்கினுடைய ஒரு முக்கிய தளத்தினுள் தரைப்படையும், கடற்படையும் , விமானப்படையும் ஒன்று சேர்ந்து பாரிய தாக்குதலை நடத்த முற்பட்டவேளை அதற்குரிய பதிலடியைக் கொடுத்து பாரிய இழப்பைக் கொடுத்தனர்.

திருகோணமலைத்துறைமுக வாயிலில் வைத்துக் கரும்புலிகள் வரலாறு எழுதினார்கள். இவ்வாறு படிப்படியாகப் பல வரலாற்று வெற்றிகளை பெற்றுத்தந்தவர்கள் கரும்புலிகள்.

இவர்கள் கடலிலும், தரையி லும் பல சாதனைகளை நிகழ்த்திய வர்கள் இவர்களுடைய சாதனை களை அந்தச் சந்தர்ப்பத்தில் கூற முடியாத சில சம்பவங்களை இந் தப் பாடல்வரிகள் மூலம் கவிஞர் கள் கூறியுள்ளனர்.

இவர்களுடைய தியாகங்கள் வரலாற்றுச் சாதனைகள் போன்ற வற்றினால்தான் இன்றைய சூழ் நிலை தோற்றம் பெற்றது. இச் சூழ்நிலையில் கூட இந்த சிறி லங்கா அரசாங்கம் சில குழுக் களை வைத்துக் கொண்டு எங்க ளுக்கு எதிரான நடவடிக்கைகளை யும் மட்டக்களப்பில் எமது போரா ளிகள் மீதான தாக்குதல்களையும் சமாதான காலத்தில் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது.

இது ஒரு மிகவும் நெருக்கடி யான சூழ்நிலையும் நெருக்கடி யான காலகட்டமும் ஆகும். நாம் விரும்பியோ விரும்பாமலோ யுத் தத்திற்கான ஒரு சூழ்நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்துகிறது. இந்த அரசாங்கத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக ஒரு பக்கம் சமாதானத்திற்கான முகத்தையும் மறுபக்கம் இராணுவரீதி யான பலப்படுத்தலையும் பல நாடுகள் வெளிப்படையாகவே செய்து வருகின்றன.

மறைமுகமாக இந்த சமாதான சூழ்நிலையைக் குழப்பி ஒரு யுத்தத்திற்கு வழி கோலுகின்ற நட வடிக்கையைத்தான் இன்றைய அரசாங்கம் மேற்கொள்கின்றது. இதைவிட 14 நாள் நேரடியாகவே முன்னறிவித்தலைக் கொடுத்து விட்டு யுத்தத்தை ஆரம்பிக்கலாம்.

உண்மையில் சமாதான வழி யில் பிரச்சினையை பேசித்தீர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் எங் களுடைய போராளிகள் தரப்பில் எத்தனையோ போராளிகள், பொறுப்பாளர்கள்,கட்டளை அதி காரிகள் என 40இற்கும் மேற்பட்ட பேராளிகளை இச்சமாதான காலத்தில் இழந்துள்ளோம்.

அன்று இலங்கை- இந்திய ஒப்பந்தம் இருந்தபோது குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரண்டு பேர் அழிக்கப்பட்டபோது திடீர் என யுத்தம் வெடித்தது. ஆனால் இன்று 40இற்கு மேற்பட்ட போராளிகளை இழந்தும் எமது சமாதானத்தினுடைய கதவுகள் மூடாது சர்வதேசத்திற்கு நியாய மான நிலைப்பாட்டை எடுத்துக் கூறிக் கொண்டுதான் இருக்கின் றோம்.

இன்று எமது போராட்டத்தை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்ற அனைவரும் இதனை மிக அவதானித்து கொண்டிருக்கிறார் கள். ஆனால் இதற்கு முடிவு எடுக்க முடியாத நிலையில் நகர்ந்து கொண்டு போகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப் பில் மிகவும் பலம் வாய்ந்த அணி யாகத்தான் இந்தக் கரும்புலிகள் அணி இருந்து வருகிறது. எனவே இந்தப்போராட்டத்திற்கு யாருடனும் கூட்டுச் சேர்ந்து வந்தாலும் எல்லாத்தடைகளையும் தகர்த்து முன்னகர்த்திக் கொண்டு செல் வார்கள். .அந்த முன்னகர்த்தலுக்கு எல்லோரும் ஒன்றிணைந்து எமது. தலைவருடைய கரங்களைப் பலப்படுத்தி பதினெண்ணாயிரம் மாவீரர்களுடைய எண்ண உணர் வுகளுக்கு மதிப்பளித்து எங்களு டைய இறுதி இலட்சியம் எமது தாய்நாடு. இத்தாய்நாட்டை அடை வதற்கு எல்லோரும் உங்களுடைய ஆதரவையும், தொடர் முன்னெடுப் புக்களையும் தொடர்ந்து வழங்க வேண்டும் என உங்களைக் கேட் டுக் கொள்கின்றேன் என்று கேணல் சூசை கூறினார். (சோ,கு)

-மன்னார் கடற்பரப்பில் -

## இந்திய மீனவர்களின் அத்துமீறலால் மீன்பிடித்தொழில் பெரிதும் பாதிப்பு

(மன்னார்)

பேசாலை, தலைமன்னார் கடலில் தொடர்ந்து இந்திய மீன வர்களின் அத்துமீறல்களால் மீன் பிடித்தொழில் பெரிதும் பாதிப் புக்குள்ளாகி வருகின்றது. இந்த அத்துமீறல்களால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல அச்சம் தெரி வித்து வருகின்றனர்.

பேசாலைக் கடலில் கடந்த வியாழக்கிழமை மட்டும் அறுப திற்கும் மேற்பட்ட இந்தியப் படகு கள் அத்துமீறிப்பிரவேசித்தன. மேலும் பேசாலை மீனவர்களைக் கடலில் மீன்பிடிக்க விடாது இவர் கள் அச்சுறுத்தியதாகத் தெரிய வருகிறது.

இதனால் இம் மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ளாது கரைதிரும்பினர். அண்மையில் இந்திய மீனவர்களின் பிரதிநிதி களுடன் மன்னாரிற்கு வருகைதந்து இப்பிரச்சினைகளைத் தெளிவாக அறிந்து இப்பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறிய போதிலும் இது வரை தீர்க்கப்படாமல் பேசாலை தலை மன்னார் மீனவர்கள் கடலில் தொடர்ந்தும் துன்பங்களை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மி)

## வாகனம் மோதியதில் இருமாணவிகள் காயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் பாடசாலை மாணவிகள் மீது வாகனம் ஒன்று மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு வர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பி.பகல் வள்ளிபுனப் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் பாடசாலை விட்டு வீடு சென்று கொண்டிருந்த வேளை வீதியால் வந்த எல்வ் ரக ரக் மாணவிகள் மீது மோதியது. இதனால் வள்ளிபுனத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்களான 15 வய துடைய நாதன் வள்ளியம்மை, 14 வயதுடைய புவனேஸ்வரி ஆகி யோர் காயமடைந்துள்ளனர். அவர் கள் அங்கிருந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டனர். (08)

## விசாரணை

(மன்னார்)

மன்னார் சிறைச்சாலை யிலிருந்து கடந்த முதலாம் திகதி தப்பியோடிய 5 கைதிகள் தொடர் பாகக் கொழும்பிலிருந்து சிறைச் சாலை ஆணையாளர்நாயகம் மன்னாரிற்கு விஜயம் செய்து விசாரணை நடத்தினார்.

சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி உட்பட கைதிகள் தப்பியோடிய தினம் கடமையில் இருந்த சிறைச் சாலை உத்தியோகத்தர்களுக்கும் கடந்த வியாழனன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. (மி)

## 3481பேர் சிகிச்சை

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத் திய சாலையில் கடந்த மாதம் (ஆனி) 3481 நோயாளர் சிகிச்சை பெற் றுள்ளதாக மேற்படி வைத்திய சாலை யில் கடந்த மாத நிலவர அறிக்கை யில் விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மொத்த நோயாளர் களில் சாதாரண காய்ச்சலினால் 676 பேரும், சிறுகாயங்களுக்காக 556பேரும், சிரங்குக்காக 428பேரும, குருதிச்சோகையினால் 262 பேரும, மலேரியாக்காய்ச்சலினால் 81பேரும, சிறுசத்திர சிகிச்சைக்காக 52பேரும, வயிற்றோட்டத்தினால் 12பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் மேற்படி வைத் திய சாலையின் மத்திய மகப் பேற்றுமனையில் மகப்பேற்றுக் காக 40 கர்ப்பினித் தாய்மார்கள் அனு மதிக்கப்பட்டு அதில் 18 சிசுப் பிறப் புக்கள் நிகழ்ந்துள்ளதாகவும் மேற் படி அறிக்கை தெரிவிக்கிறது.(ஆ)

## தொழில்சார் பயிற்சிநெறி நிறைவில் சான்றிதழ் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

ஆசிய ஜப்பானிய உறவுப்பால நிறுவனமும், கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து நடாத்திய தொழில்சார் பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை இலங்கைக்கான




ஜப்பானிய பிரதிநிதி வை.ஸீக்காமுறா, கிளிநொச்சி மாவட்ட பாஜ்நிறுவன இணைப்பாளர் ரி.ஓய்ஷி அரச, திணைக்கள உதவித்திட்டமிடல் பணிப்பாளர் மத்தியூஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மண்டபத்தில்நிகழ்வு இடம்பெற்றது.அங்கு இலங்கைக்கான ஜப்பானியப் பிரதிநிதி, உரையாற்றியதோடு நிகழ்வில் பங்குபற்றிய அனைத்து பணிப்பாளர்கள் தலைவர்கள் உத்தியோகத்தர்களும் கருத்துரை வழங்கினர். பின் சான்றிதழ் வழங்கப்பட்டது. தச்சுவேலைப்பயிற்சி தையல்பயிற்சி போன்றவற்றை ஆறுமாதகாலமாகப் பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. சான்றிதழ்களை ஸீக்காமுறா, யூ.என்.எச். சீ. ஆர். பிரதிநிதி மற்றும் மத்தியூஸ், ரி. ஓய்ஷி மற்றும் பயிற்சி ஆசிரியர்கள் போன்றோர் வழங்கிக் கௌரவித்தனர்.

அடுத்து பயிற்சியாளர்களின் கைவண்ணத்தில் உருவான சில பாவனைப்பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டதை நிகழ்வில் கலந்துகொண்டோர் பார்வையிட்டனர். (சோ,கு)

## ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கல்விவலயப்பாடசாலைகளில் நிலவிவரும் ஆங்கில ஆசிரி யர் களுக்கான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒப்பந்த அடிப்படையிலான பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப் பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்பெற்றுள்ளது.

க.பொ.த சா/த இல்ஆங்கிலத்தில் ஏ அல்லது டி சித்தியுடன் உ/த இல் 3 பாடங்களில் சித்தி அல்லது க.பொ.த சா/த இல் ஆங்கிலத்தில் பி,சி சித்தியுடன் க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி, அல்லது ஆங்கிலத்தில் தேர்ச்சியுள்ள ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாமெனவும் விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக வலயக்கல்விப்பணிப்பாளர் வலயக் கல்விப்பணிமனை கிளிநொச்சி என்னும் முகவரிக்கு தபாலிலோ அன்றி நேரிலோ அனுப்பிவைக்கலாமெனவும் கிளி/வலயக் கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம் தெரிவித்துள்ளார். (சோ.கு)



இராமநாதபுரம் தனியார் முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த திறனாய்வுப் போட்டி கடந்த வியாழனன்று முன்பள்ளி ஆசிரியை த.சியாமளா தலைமையில் நடைபெற்றது. இதில் சிறார்களின் இரு வேறு நிகழ்வுகளின் தோற்றத்தை படங்களில் காண்க.

# தமிழீழக் காவல்துறையின் அங்கமாக கட்டியெழுப்பப்படும் தமிழீழ தேசிய துணைப்படை

**கலாவரன்**

தமிழர் தாயகத்தின் பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பேணி மக்களின் வாழ்வை அந்தந்த ஒழுங்கமைப்பில் நகர்த்திச் செல்வதற்கு நேர்மையானதும் மகத்துவமானதுமான பணியை தமிழீழ காவல்துறை மேற்கொண்டு வருகின்றது. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் எண்ணக்கருவில் உதித்த இச்சிந்தனை இன்று வளர்ச்சி பெற்று தாயக மெங்கும் 24 காவல் பணிமனைகளைக் கொண்டு விளங்குகின்றது. இவ் அமைப் பானது 1991 ஆண்டு மிகக்குறைந்தளவு உறுப் பினர்களுடன்,மதிப்பிற்குரிய திரு.பா.நடேசன் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை யும், பல கட்டுமானங்களையும் கொண்டு விளங்குகின்றது.

அதன் பொறுப்பாளர் பா.நடேசன் அவர் கள் தலைமையில் இவ்வமைப்பானது 2001 ஆம் ஆண்டு துணைப்படை என்ற ஒரு அமைப்பினையும் உருவாக்கி தமிழீழ கட்டுகமானப்பணிகளை மேற்கொண்டு வந்துள்ளது.

இவ்வாறு பெருமிதம் கொண்டு விளங்கி வரும் இக்காவல்துறை அமைப்பானது தேசியத்தலைவரின் நேரடிப்பணிப்பிற்கு இணங்க அதன் பொறுப்பாளர் பா.நடேசன் தலைமையின் கீழ் தமிழீழ தேசியத் துணைப் படை என்ற ஒரு கட்டமைப்பை அண்மையில் உருவாக்கியுள்ளது.

இத்தேசிய துணைப்படையுடன் இணைந்து முன்னைய துணைப்படை வீரர்களுமாக ஒரு மித்து தமிழீழ தேசிய துணைப்படை என்ற கட்டுமானத்தை உருவாக்கி அதற்கு தேவை யான ஆளணிகளைப் பெற்றுக்கொள்ள தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலி ருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பலர் வருகை தந்து கொண்டு இருக்கிறார்கள் மேலும் பலர் வருகை தர இருப்பதாக தேசிய துணைப்படை பொறுப்பாளர் கலையரசன் அறியத்தந்துள்ளார்.



மேலும் அவரிடம் சென்று இந்த தேசிய துணைப்படைக்கு எந்த எந்த மாவட்டங் களிலிருந்து வருகை தந்தார்கள் அவர்கள் இப்படைக்கு தாமாக முன்வந்தமைக்குரிய காரணங்கள் பற்றியும் அவர்களிடம் கேட்டபோது.

நாம் இந்தத் துணைப்படைக்கு ஆளணி வேண்டி நின்ற போது எமது கட்டுப்பாட்டுப் பகுதியோடு தமிழீழத்தின் ஏனைய மாவட்டங் களிலிருந்தும் தகுதியுடைய ஆண், பெண் இருபாலர்களும் வருகை தந்துள்ளார்கள். ஆனால் பலர் தொலைபேசி மூலமும் எமது காவல் பணிமனைகளுடன் தொடர்பு கொண்டு தம்மில் பலர் இப்படையில் சேர இருப்பதாகவும் அதற்குரிய கால அவகா சத்தை நீடித்து தரும்படியும் கேட்டு கொண்ட தற்கு இணங்க நாம் அந்த ஆட்ச் சேர்ப்பு நடவடிக்கையின் நேர்முகத் தேர்வுக் குரிய திகதியினை நீடித் துள்ளோம். அதாவது கடந்த 06 ஆம் திகதி தொடக் கம் 20 ஆம் திகதி வரை இரண்டு கிழமைகள் நீடித் துள்ளோம். இவ் இரண்டு கிழமைக் குள்ளும் தமிழீழத்தில் எங்கிருந்து வந்தாலும் அதாவது தமிழ்ப் பிரஜையாக இருந் தால் நிச்சயமாக அவர்களை நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிப்பதற்கு அனுமதி கொடுப்போம்.



அந்த நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய வர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் களது வீடுகளிற்கு செய்திகளை அனுப்பி அவர்களை வரவழைத்து கட்டம், கட்டமாக பயிற்சிகளை வழங்கிக் கொண்டு வருகிறோம்.

இப்படையணிக்கு குறிப்பாக வெளி மாவட்டத்திலிருந்தே பெருமளவானோர் வருகிறர்கள். எமது கட்டுப்பாட்டுப் பகுதி யில் இருக்கிறவர்கள் ஏற்கனவே படைப் பிரிவில் இணைந் திருக்கின்றார்கள். அதனால் இந்தத் தேசியபடை அணிக்கு உண்மை யில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம் பாறை, திருகோண மலை போன்ற மாவட் டங்களிலிருந்தே பெரு மளவான இளைஞர் கள், யுவதிகள் வந்துள் ளனா.

இங்கு வருகை தந்து இன்று வரை 1500 இற்கு மேற்பட்ட வர்கள் நேர்முகத் தேர் வில் பங்குபற்றியுள்ளனர். இவர்களில் பல நூற்றுக்கணக்கானோர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகளைப் பெற தயாராகிக் கொண்டு இருக்கின்றனர்.

அத்துடன் இங்கு வருகை தந்தவர் களில் அனேகமானவர் தாம் இந்த தேர்வில் எடுபடுவோம் என்ற நம்பிக்கையில் தங்கி நிற்கக்கூடிய ஆயத்தங்களுடன் வருகை தந்துள்ளார்கள். அவர்களை நாம் உடனடி யாகவே பயிற்சிக்கு அனுப்பி விடுகின்றோம். இது அவர்கள் மத்தியில் தமிழ்த் தேசியத்தின் மீது இருக்கும் பற்றினையும் இந்த அமைப்பில் தாமும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற ஆவலையும் எடுத்துக் காட்டுகின்றது. இது போன்ற இன்னும் பலர் தாமாக முன் வருவார்கள் என்ற நம்பிக்கை யும் எம்மிடம் உண்டு .

அத்தோடு இந்த தமிழீழ தேசிய துணைப் படை என்ற கட்டுமானம் உருவாக்கப்பட்டதன் மூலம் எமது தேசியத் தலைவர் அவர்கள் வேலையற்று இருந்த எத்தனையோ இளம் சந்ததியினருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளார். இதன் மூலம் அவர்கள் நிறைந்த பயனை அடைவதோடு அவர்களது பொருளாதார பிரச்சினைகள் நீங்குவதற்கும் வழிவகுத்துள்ளார். மேலும் இன்று எத்த னையோ பட்டதாரிகள் வேலைவாய்ப்பு அற்று இருக்கும் இந்நேரத்தில் இப்படியான ஒரு சம்பளத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு பெற்று கொள்கின்றார்கள் என்றால் அதன் பெருமை எமது தலைமைக்கே உரியதாகும்.

மேலும் இந்தத் தேசியத்துணைப்படை வீரர்களுக்கு உரிய சம்பளமாக ரூபா 8500 வழங்குவதோடு இவர்களுக்குரிய உணவு, உடை, உறையுள் போன்ற மேலதிக சலுகை களையும், போக்குவரத்துவசதிகளையும் வழங்கிவருகின்றோம். இவ் வீரர்கள் அனைவரும் எமது தேசிய போரட்டத்திற்கு அமைவாகவும் அதன் திட்டவட்டமான உரிமைப்போரட்டத்திற்கும், எப்போதும், எந்தஇடத்திலும், எந்தநேரத்திலும் தம்மைத் தாமே தயார்படுத்தி போராட்டத்திற்கு வலுச் சேர்க்கின்றவர்களாகவும் இருப்பார்கள். இதன்மூலம் அவர்கள் தமிழ் மண்மீட்க தாமும் ஏதோ ஒரு பணியை செய்துள்ளோம் என்ற ஒரு பெருமையையும் பெற்றுக்கொள் வார்கள் என்று நினைக்கின்றேன்.

இந்தத் தேசிய துணைப்படையானது எமது காவல்த்துறை அமைப்புடன் இணைந்த ஒரு அமைப்பாகவே இயங்கிவரும். இதற் குரிய பொறுப்பாளர்கள் பலர் நியமிக்கப் படலாம். அதற்குரிய ஆலோசனைகள், வழிநடத்தல்கள் மற்றும் மேற்பார்வைகளை எமது தலைமையே பார்த்துக் கொண்டி ருக்கும்.

அடுத்து இந்தத் தேசிய துணைப் படைக்கு வருகை தந்த வெளிமாவட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் பங்குபற்றிய வேளை அவர்களிடம் இந்த தேசிய துணையில் நீங்கள் சேர்வதற்கான காரணங்கள் என்ன என்று வினாவிய போது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் கூறினான் தான் பாடசாலைக் கல்வியின் பின் வீட்டிலேயே இருப்பதாக வும் எதுவித வேலையும் இல்லை என்றும் தனது அப்பா இறந்து விட்டார். வீட்டில் பொருளாதார நெருக்கடிகளும் அதிகரித் தால் அதனை நிவர்த்தி செய்ய முடியாது திண்டாடியவேளை தமிழீழ காவல் துறையினரால் இப்படியான ஒரு வேலை வாய்பை வேண்டி நின்றதனால் தமக்கு வேலை செய்ய வாய்ப்பு ஏற்பட்டதோடு இந்த மண்மீட்புப் போராட்டத்தில் தானும் ஒரு அங்கத்தவனாக இருக்கப்போகிறேன் என்பதை எண்ணி மகிழ்வடைவதோடு இந்த அமைப்புக்கும் நன்றி கூற கடமைப்பட்ட வனாக உள்ளேன் என்று கூறினார்.

இது போன்றே அம்பாறை, திருகோண மலை, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற மாவட்டத்தி லிருந்து வருகை தந்திருந்த பெருமளவான இளைஞர், யுவதிகள் தமது கஸ்ரத்தையும், தமக்கு இப்படி ஒரு வாய்ப்பு ஏற்பட்டதையும் கூறினார்கள். அத்துடன் தமது பகுதியிலிருந்து இன்னும் பலர் இந்த அமைப்பில் இணைய வருவார்கள் என்றும் கூறினார்கள்.

எனவே ஒட்டுமொத்தமாக நோக்கும் போது இன்றைய காலத்தின் தேவையைக் கருத்தில்க் கொண்டு எமது பலத்தை நாமே பலப்படுத்தும் நோக்குடன் பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் நல்லெண் ணத்துடனும் எமது தேசியத்தலைவரின் சிந்தனையில் உருவாகி வலுப்பெற இருக் கும் இந்த தேசியத் துணைப் படையானது எமது தாயகமெங்கும் அதன் பணிகளை மிகவும் சிறப்பான முறையில் கொண்டு நடத்தி நாட்டின் தேவைகளையும், மக்களின் பிரச்சினைகளையும் கருத்தில் எடுத்துக் கொண்டு நமது மண் விடிவு பெறும் வரை யும் அயராது உழைத்து எமது மண்ணை நாமே ஆளுகின்ற காலம் வந்தவுடன் அதில் தொடர்ந்து இவர்களது பணி இடம்பெற வேண்டும் இதன் மூலம் எமது தமிழீழம் ஒரு கட்டுக் கோப்பான நாகரீகமான நாடாகவும் உலகமே வியந்து பார்க்கும் ஒரு பரிணாம வளர்ச்சி பெற்ற நாடாகவும் எமது தமிழீழம் சிறந்த நிர்வாகக் கட்டமைப் புக்களைக் கொண்டு இயங்கும் என்றும் நம்புகின்றோம்.

---

# ஒரேயொரு வைத்திய அதிகாரியுடன் முள்ளியவளை வைத்தியசாலை செயற்பாடு

## -சிகிச்சை பெறுவதில் நோயாளர் அவலம்

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்திய சாலையில் அடிக்கடி வைத்திய அதிகாரி இன்மையால் நோயாளர்கள் அவலப்பட்டு வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி 08.07.2004 அன்று கூட்டத்திற்காக சென்றதால் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி இன்மையினால் அன்றைய தினம் பெருமளவான நோயாளர்கள் வைத்திய சாலைக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும் பிச் சென்றதையும் வசதியான சில நோயா ளர்கள் முல்லைத்தீவு வைத்தியசாலைக்குச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது.

மேற்படி வைத்தியசாலைக்கு ஒரேஒரு வைத்திய அதிகாரி உள்ளதால் வைத்திய அதிகாரி வைத்தியசாலை விடயமாகவோ, சொந்த விடயமாகவோ வெளியே சென்று விட்டால் நோயாளர்கள் சிகிச்சைப் பெறாது ஏமாற்றம் அடைந்து அவலப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

---

# பிரதான வீதியருகே பட்ட மரம் பாதிப்பை ஏற்படுத்தலாமென அச்சம்

(மல்லாவி)

மல்லாவி நகரின் பிரதான வீதியில் சுகா தார வைத்திய அதிகாரியின் பணிமனைக்கு பக்கமாக நீண்ட காலமாக பாரிய பட்ட மரம் ஒன்று விழும் நிலையில் இருந்து வருகிறது்

மேற்படி மரம் அண்மையில் வீசி வரும் கடும் காற்றினால் முறிந்து விழும் நிலையில் இருப்பதால் இவ் வீதியூடாகப் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள். பாடசாலை மாண வர்கள், பாதசாரிகள் எனப்பலரும் இவ் மரம் முறிந்து விழும் என்ற நிலையால் அச்ச மடைந்துள்ளனர். பிரதான வீதியில் இருக்கும் பட்ட மரத்தினை அகற்ற சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்பதோடு பட்ட மரத்திற்கு முன்பு 25 யார் தூரத்தில் வனவள மரமடுவம் ஒன்று இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (24)



# யாழ்.குடாநாட்டில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராய மாநாடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டுப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் முக்கிய மாநாடு ஒன்று நாளை காலை 9.30 மணியளவில் தீவகத்தில் உள்ள வேலணைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.**

இம்மாநாட்டில் அரசியல்துறையைச் சேர்ந்த உறுப்பினர்கள், போராளிகள், பொது மக்கள். மாதர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என ஆயிரக்கணக்கானோர் ஒன்று கூடவுள்ளனர்.

இதன் போது யாழ்.குடாநாட்டில் பெண்கள் எதிர்கொள்ளும் அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான நெருக்கடிகள் மற்றும் சமூக நெருக்கடிகள் தொடர்பாக ஆராயப்பட்டு இவற்றுக்கான தீர்வுகளும் தீர்மானங்களும் எடுக்கப்படும்.

அத்துடன் அடக்குமுறைகளுக்கு எதிராகப் பெண்கள் எழுச்சி கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து இதன் போது வலியுறுத்தப்படும். (33)

# லெப். சீலனின் 21 ஆவது நினைவுதினத்தை உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்க ஏற்பாடு

(தென்மராட்சி)

யாழ்.தென்மராட்சி மண்ணில், வீரச்சாவடைந்த முதலாவது தாக்குதற்தளபதி லெப்டினன் சீலன் மற்றும் வீரவேங்கை ஆனந் ஆகியோரது 21 ஆவது ஆண்டு நினைவுதினம் இம்முறையும் தென்மராட்சியில் மிகவும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் இடம் பெற்ற படையினருடனான மோதலில் வீரச்சாவடைந்த இவ்விருவரதும் நினைவுநாளை எழுச்சியான முறையில் கடைப்பிடிப்பதற்கு தென்மராட்சிப் பிரதேச அரசியல் துறை, தேசிய எழுச்சிப்பேரவை பொது அமைப்புக்கள் என்பன ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. அந்தவகையில் தென்மராட்சிப் பிரதேசத்தினது விசேட நிகழ்வுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி கொடிகாமம் அல்லாரையில் உள்ள லெப்டினன் சீலன் மற்றும் ஆனந் ஆகியோரது நினைவாலயப் பகுதியில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (33)

# கரவெட்டியில் நாளை அரங்காற்றுகை நிகழ்வு

(வடமராட்சி)

வடமராட்சி கரவெட்டியில் 'வீரமுரசம்' எனும் அரங்காற்றுகை நிகழ்வு ஒன்று நாளை மாலை இடம்பெறவுள்ளது.

சமகால இராணுவ மற்றும் அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கிராம மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி எழுச்சி கொள்ளவைக்கும் விழிப்புணர்வூட்டல் திட்டத்தின் ஓர் அங்கமாகவே இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் போது சமகால அரசியல் மற்றும் இராணுவ நிலவரங்களைச் சித்திரிக்கும் தெருநாடகங்கள் நடத்தப்படுவதுடன் அரசியல் சம்பந்தமான கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன. (33)

# மீனவர் மீதான இராணுவத்தினரின் கெடுபிடி; ம.உ. ஆணைக்குழுவின் அதிகாரிகள் விசாரணை

(தென்மராட்சி)

தென்மராட்சி தெற்கின் கோயிலாக்கண்டி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீதான படைத்தரப்பின் கெடுபிடிகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். கடந்த வியாழக்கிழமையன்று அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஹோகிதபிரியதர்சன தலைமையிலான குழுவினர் அப்பகுதி மீனவ சங்கப்பிரதிநிதிகளையும் மற்றும் பொது அமைப்புக்களது பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். குறிப்பாக மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள கடலினுள் அமைக்கப்பட்டுள்ள படையினரது முட்கம்பி வேலிகளை அகற்றுதல் மற்றும் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் மீது சோதனை நடவடிக்கை என்ற பெயரில் படையினரால் வலைகள் சேதமாக்கப்படுகின்றமை மீனவர்களால் பிடிக்கப்படும் இறால்கள் படையினரால் களவாடப்படுகின்றமை என்பன தொடர்பாக அப்பகுதி மீனவ சங்கப் பிரதி நிதிகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிரதிநிதிகளது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். இதனை அடுத்து அப்பகுதிக்கு விஜயம் செய்த யாழ். மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி இப்பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துவைப்பதாக உறுதி கூறியிருந்த போதும் இதுவரை அவ்வாறான நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் பிரதிநிதிகள் கூறியுள்ளனர். இதேவேளை இப்பிரச்சினைகள் தொடர்பில் படைத்தலைமையுடன் மீனவ சங்கப்பிரதிநிதிகளைச் சந்திக்க வைத்து விரைவில் தீர்வினைக் காண ஆணைக்குழு நடவடிக்கைகளைத் தற்போது முன்னெடுத்துள்ளது. (27)

## வருடாந்த மஹோற்சவம்

யாழ். கோப்பாய் மத்தி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகி 10 நாட்களுக்கு இடம் பெறவுள்ளது.இதன் போது விசேட ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன. (33)

## ஆங்கில தினப் போட்டி

யாழ். உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கோட்ட மட்ட ஆங்கிலதினப் போட்டி எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது..

இதற்கான சகல ஏற்பாடுகளுடன் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. (33)

# பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள ஆண்டு 5 மாணவர்களின் நலன் கருதி யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கல்வி வலயங்களிலும் தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. கடந்த கால யுத்த அனர்த்தங்கள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு மங்கிப்போயுள்ள பிரதேச மக்களின் நலன் கருதியே தமிழ் மாணவர் ஒன்றியம் வலயமட்டத்தில் இவ்வாறான வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றது.இதேவேளை கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பின் தங்கிப் போயுள்ள கிராமங்களில் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மாணவர்களின் நலன் கருதி கற்றல் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால் தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றது. (33)

# யாழ்ப்பாணத்தில் புதிய நீதிமன்ற கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

யாழ். நீதி மன்றத்திற்கான அடிக்கல் நாட்டு விழா எதிர் வரும் 14 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதவான் கே.ஆர்.எஸ்.வரதராஜா தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் பிரதம நீதி அரசர் சரத் என்.சில்வா புதிய நீதி மன்றக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைப்பார்.யாழ். கோட்டையடியில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த யாழ். நீதிமன்றம் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் அழிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு முன்னர் அழிக்கப்பட்ட நீதி மன்றம் இருந்த இடத்திலேயே இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

உலக வங்கியின் 10 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இக்கட்டடம் 8 வகையான நீதிமன்றங்களை உள்ளடக்கிய ஓர்கட்டடத் தொகுதியாகவே அமைக்கப்படவுள்ளது. (33)

# முக்கிய அறிவித்தல்

## பிரதேச சபை, பூநகரி.

பூநகரி பிரதேசசபை எல்லைக்குள் மணல் ஏற்றுவதற்கு குடமுருட்டி, கௌதாரிமுனை ஆகிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பிரதேச சபையின் அனுமதியின்றி மணல்ஏற்றும் 01 லோட்டுக்கு 5000/= தண்டப்பணம் அறவிடப்படும் என்பதனையும், இரவு நேரங்களில் மணல் ஏற்றுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் இதனை மீறி ஏற்றுபவர்கள் மீது குற்றப்பணம் அறவிடப்படுவதுடன் சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

க.தனபாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
பிரதேசசபை.
பூநகரி.

(சி. 9752)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி







| | | |
|---|---|---|
| **சுரேஸ் நளின்**<br>சிவநகர்<br>உருத்திரபுரம். | **அம்புரோஸ் அலெக்ஸ் புருஸ்டன் (ஜெனி)**<br>வெற்றிலைக்கேணி<br>முள்ளியான். | **எ.பி. தயாரத்ன**<br>குருநாகல்<br>கனரக வாகன<br>உரிமையாளர் |

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் ஒளிவிளக்காய்
சிரிப்பின் சிகரமாய்
நளின், அலெக்ஸ், எ.பி. தயாரத்ன.
நீங்கள் மூவரும் இம் மண்ணில் மறைந்து
31 நாட்கள் சென்றாலும்
எம் உள்ளங்களை விட்டகலாத உங்கள்
அன்பு முகங்களை என்றென்றும் மறவாத
சுடர் பணிப்பாளர், பணியாளர்கள் நாம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.
உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
உங்களின் குடும்பங்களுக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்/பணியாளர்கள்
சுடர்நிர்மாணி
வில்சன் வீதி,
கிளிநொச்சி.

(4802)

# தமிழரின் கல்வித் தேவையும் இன்றைய நிலையும்

இலங்கைத்தீவில் தமிழர் 'கல்வியானது மாறி மாறி வந்த எல்லா அரசுகளாலும் எல்லா நிலைகளிலும் எல்லா வகைகளிலும் புறக்கணிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகிறது. 70களின் தொடக்கத்தில் தமிழர்களின் பல்கலைக்கழகக் கல்விக்கு உலைவைக்கும் நோக்குடன் தரப்படுத்தல் எனும் வழிமுறை அன்றைய அரசால் கையாளப்பட்டது.

வெளிப்டையான, நேரடியான அந்த இனவாதப்போக்குக்கு உள்நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய அளவிலும் கடும் எதிர்ப்புக்கிளம்பியதை அடுத்து சிங்கள இனவெறி அரசு தமிழர் கல்விக்கு உலை வைக்கும் தனது போக்கை மாற்றாது, அதற்கான வழிமுறைகளில் மாற்றங்களை மேற்கொள்ளும் முயற்சியில்

**திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகம் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் ஆரம்பமான 'தமிழரின் கல்வித் தேவைகளும் இன்றைய நிலையும்' என்ற தலைப்பிலான ஆய்வுப் பட்டறையில் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் பட்டறையின் குறிக்கோள் அறிமுகமும் இலக்கும் என்ற விடயத்தின் கீழ் ஆற்றிய உரை.**

இறங்கியது.

தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த சிங்கள அரசுகளினால் தமிழ் மொழி மூல ஆசிரியர்களின் பணியமர்த்தல்கள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டும், மட்டுப்படுத்தப்பட்டும் வருகின்றன. தமிழ்ப் பகுதிகளுக்கான கட்டட வளங்கள் ஏனைய கற்பித்தற் கருவிகள் போன்றவற்றிலும் புறக்கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் மொழிமூலப் பாட நூல்கள் தரக் குறைவாகவும் காலந்தாழ்த்தியும் வெளியிடப்படுகின்றன.

பல பாடங்களுக்கான நூல்கள் தமிழ் மொழியில் அறவே வழங்கப்படாத நிலையும் இருந்து வருகின்றது. உலக வங்கியின் உதவியோடு நாடளாவிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விச் சீர்திருத்தங்கள் அதற்கான வளப்பங்கீடுகள் போர்ச்சூழலைக் காரணங்காட்டி, தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்காத நிலை ஏற்படுத்தப்பட்டன.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சியிலிருந்து வருகின்ற சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் இக்கொடிய இனவெறி நடவடிக்கைகளினால் தமிழ் மாணவர் கல்வித் தரம் நாடளாவிய அளவில் எல்லா மட்டங்களிலும் குறைந்து கொண்டு வீழ்ச்சிப்போக்கில் செல்கின்றது.

70ஆம் ஆண்டுகளில் தரப்படுத்தல்களை எதிர்த்துத் திறமைக்கு முன்னுரிமை கோரிப் போராடிய தமிழ் மாணவர்கள் இன்று அரசு வழங்கும் மாவட்டக் கோட்டாக்களுக்கு கையேந்தும் நிலைக்குத் தமிழர் கல்வி தாழ்ந்து விட்டது, தொடர்ந்தும் தாழ்ந்து கொண்டு செல்கிறது. அன்று தரப்படுத்தலை எதிர்த்துக் கிளம்பிய அளவுக்குத் தமிழர்கள் மீதான கொடிய கல்விச் செயற்பாடுகளுக்கெதிராகப் பெரும் எதிர்ப்புக்கள் எமது பகுதிகளிலிருந்து யாராலும் எழுப்பப்படவில்லை.

கல்விக்கு அடிப்படையான தொடக்கக் கல்விப் பிரிவு ஆசிரியர்களுக்கு நீண்டகாலமாக நிலவிவரும் கடும் பற்றாக்குறையினால் தமிழ் மாணவர்களின் தொடக்கக் கல்வியே ஆட்டங்கண்டுவிட்டது.

**பட்டியல் (I)**

| | ஆசிரியர் தேவை | இருப்பு | பற்றாக்குறை | பாற்றாக்குறை வீதம் | மாணவர் தொகை |
|---|---|---|---|---|---|
| தொடக்க நிலை 6-11 அகவை | 10687 | 7582 | 3105 | 29.05% | 2,51,425 |
| இடைநிலை 12-17 அகவை | 9154 | 7322 | 1832 | 20.01% | 2,52,519 |
| மொத்தம் | 19,841 | 14904 | 4937 | 24.88% | 5,03,944 |

தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்குத் தேசிய அளவில் 25% பற்றாக்குறை நிலவுகையில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில், 30% பற்றாக்குறை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் இருந்து வந்துள்ளது.

கல்வி கற்க வேண்டிய தமிழ் மாணவர்கள் 18 அகவைக்குட்பட்டோர் ஆயுதப் போராட்டத்துக்குள் ஈர்க்கப்படுகின்றனரேயென்று கவலை கொள்ளும் உலகத் தொண்டு நிறுவனங்கள் சில ஐ.நா. சபையின் சிறுவர் உரிமை தொடர்பான பட்டயத்தில் குறிப்பிடப்படும் கல்வியுரிமையை வழங்க வேண்டிய சிறிலங்கா அரசு மறுத்து வருவதைக் கண்டும் காணாதது போன்று இருந்து வருகின்றது. 18 அகவைக்குட்பட்ட 1,25,000 பேர் தமிழர் தாயகப் பகுதிகளில் (வடக்குக் கிழக்கில்) மட்டும் கல்வி உரிமை மறுக்கப்பட்டவர்களாக

| | தேவை | இருப்பு | பற்றாக்குறை | பாற்றாக்குறை வீதம் |
|---|---|---|---|---|
| தொடக்க நிலை 6-11 அகவை | 19332 | 13630 | 5702 | 29.49% |
| இடைநிலை 12-17 அகவை | 18054 | 14712 | 3342 | 18.51% |
| 6-17 | 37386 | 28342 | 9044 | 24.19% |

இருக்கின்றார்கள். இலங்கை முழுவதிலும் 2,00,000 இற்கும் கூடுதலான 18 அகவைக்குட்பட்ட தமிழ் மாணவர்கள்

**பட்டியல் (II)** 94ஆம் ஆண்டில்

| | சிங்கள மொழி | தமிழ் மொழி | தேசிய ஆ-மா விகிதம் |
|---|---|---|---|
| 1. ஆரம்ப நிலை வகுப்பு : 1-5 | 25.7 | 36.3 | 27.9 |
| 2. இடைநிலை வகுப்பு : 6-11 | 21.7 | 28.5 | 22.8 |

ஆசிரியர் இன்மையால் உரிய வகையில் கல்வியைப் பெற முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

கடந்த 10 ஆண்டுகளாக தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் -மாணவர்கள் விகிதம் சிங்கள தமிழ்ப் பிரிவுகளிடையே எவ்வாறு இருந்து வருகிறது என்பதைப் பின்வரும் தரவுகள் தெளிவுபடுத்துகின்றன.

98ஆம் ஆண்டில் கேம்பிரிட்ஜ் கல்வி ஆலோசனைக் குழுவின் உதவியுடன் பிரித்தானிய அரசின் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களத்தின் நிதி உதவியுடன் சிறிலங்கா கல்வி உயர்கல்வி

| ஆண்டு | தேவைக்குக் கூடுதலான ஆசிரியர்கள் | தேவைக்குப் பற்றாக்குறை ஆசிரியர்கள் |
|---|---|---|
| 1993 | 14000 | 10,000 |
| 1998 | 5891 | 9320 |
| 2000 | 11,815 | 10766 |
| 2003 | 4801 | 9608 |

அமைச்சு தீட்டிய தொடக்கக் கல்வி நிலை ஐந்தாண்டுத் திட்டவரைபிலிருந்து.

நோக்கம் 4: ஆரம்பக் கல்விக்கு மனித மற்றும் நிதி வளங்களை சமத்துவமாக வழங்குவதை 2003 அளவில் செம்மைப்படுத்துதல்.

இலக்கு 1 : 1988 இல் சிங்கள மொழி மூலத்தில் 1:28 ஆக உள்ள ஆசிரியர், மாணவர் வீகிதத்தை 2001 அளவில் 1:27 ஆக செம்மைப்படுத்தல். 1998இல் தமிழ் மொழி மூலத்தில் 1:41 ஆக உள்ள ஆசிரியர் மாணவர் வீகிதத்தை 2003 அளவில் 1:27ஆக செம்மைப்படுத்தல்.

பொதுவாக ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை எமது தாயகப் பகுதியில் (வடக்குக் கிழக்கில்) 2000இற்கு மேல் இருந்துவரும் நிலையில் தொடக்கக் கல்விப் பிரிவில் மட்டும் 1262 ஆங்கில ஆசிரியர்கள் 78.38% பற்றாக்குறை நிலவுகிறது. வன்னிப் பகுதியில் 550 இற்கும் மேற்பட்ட ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.

மொத்த மாணவர் - 71956
மொத்தத் தேவை 598

| தொ. எண். | வலயம் | மா.தொ. | தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் தேவை | இருப்பு | பற்றாக் குறை | மா.தொ. | இடை நிலைக்கல்வி ஆசிரியர்கள் தேவை | இருப்பு | பற்றாக் குறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | மடு | 3502 | 36 | 01 | 35 | 2948 | 23 | 102 | 21 |
| 02 | வவுனியா | 6614 | 89 | 01 | 88 | 4200 | 24 | 07 | 17 |
| 03 | முல்லை.. | 890 | 57 | - | 57 | 9410 | 64 | 17 | 47 |
| 04 | துணுக்காய் | 4473 | 56 | - | 98 | 4411 | 35 | 05 | 30 |
| 05 | கிளிநொச்சி | 13484 | 98 | - | 98 | 14424 | 116 | 14 | 102 |
| மொத்தம் | | 36563 | 336 | 02 | 334 | 35393 | 262 | 54 | 217 |
| | | | | 0.59% | 99.40% | | | 17.17% | 82.82% |

இருப்பு - 47 7.8 5%
மொத்தப் பற்றாக்குறை 551 92.15%

ஜப்பானின் உதவியுடன் ஆக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் தொடக்கக் காலத்திலிருந்தே சிங்களக் கல்வி நிறுவகமாக இயங்கி வருவதால் தமிழர் கல்விக்கு ஏற்பட்டுள்ள, ஏற்பட்டு வரும் இடர்கள், தடைகள் சொல்ல முடியாதவை. ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், ஆசிரியர் கைந்நூல்கள், பாடநூல்கள் உரிய காலத்தில் உரிய



'தமிழரின் கல்வித் தேவைகளும் இன்றைய நிலையும்' ஆய்வுப்' பட்டறையின் முதல் நாள் நிகழ்வில்.

க.பொ.த.சா.தர. தொழில்நுட்ப பாடங்களில் தமிழ்மொழி மூல மாணவர்கள் தோற்றிய வீதம்

| பாடங்கள் | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மரவேலை | 7.63% | 4.38% | 6.27% | 12.66% | | | | |
| மேசன்வேலை | 1.5% | | | | | 6.57% | 9.36% | 9.09% |
| உலோகவேலை | 3.14% | 0.35% | 1.9% | 2.64% | 0.83% | | | |
| வானொலி திருத்தம் | .12% | 1.07% | 3.26% | 4.59% | 9.1% | | | |
| நெசவு | 1.75% | 3.18% | 0.42% | 1.93% | 7.84% | | | |
| மோட்டார், தொழில்நுட்பம் | 3.9% | 3.23% | 5.17% | 7.28% | 8.6% | | | |
| மின்னியலும் இலத்திரனியலும் | | | | 1.75% | 1.51% | 4.82% | 4.34% | 3.82% |
| இயந்திரவியல் தொழில்நுட்பம் | | | | | | | 3.75% | 3.05% |
| கலைத்திறன்கள் நுட்பத்திறன்கள் | | | | | | 2.45% | 1.35% | 0.93% |
| விவசாயம் | 10.03% | 7.06% | 10.50% | 10.77% | | 18.56% | 19.31% | 20.05% |
| வர்த்தகம் | 27% | 19.41% | 19.4% | 26.1% | 27.3% | 31.64% | 31.99% | 27.29% |
| மனைப்பொருளியல் | 16.64% | 11.45% | 15.62% | 20.76% | | | | |

முறையில் கிடைப்பதில்லை. கல்வி நிர்வாக சேவை அலுவலர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையினால் அந்தப் பணிகளைப் பள்ளி முதல்வர்களும், பள்ளி முதல்வர்களின் பணிகளை ஈடுசெய்ய ஆசிரியர்களும் பணியாற்றுவதால் கற்றல் கற்பித்தலில் முழுமையான குழப்பமும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளன.

இடை நிலைக்கான கணித விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறைகளினால் கணித விஞ்ஞான கல்வித் தரந்தாழ்ந்துவிட்டது. தமிழ்ப் பள்ளிகளில் தொழில் முன்னிலைக்கல்வி அறவே இல்லை என்ற நிலை ஆகிவிட்டது.

தேவையான தொழில்நுட்பக் கல்லூரிகள் இன்மை யினாலும் இருக்கும் தொழில்நுட்பக் கல்லூரிகள் கடும் வளப்பற்றாக்குறைகளோடு இயங்குவதாலும் தொழில் தொடர்பான தொழில்நுட்பம் தொடர்பானஅறிவு தமிழ் மாணவர்களுக்கு அறவே கிடைக்காத எட்டாக்கனியாகிவிட்டது.

கீழே தரப்பட்டுள்ள க.பொ.த.சா.தா. தொழில்நுட்பப் பாடத்தில் தோற்றும் தமிழ் மாணவர்கள் வீதபுள்ளி விபரம் தமிழ் மாணவர்களின் தொழில்நுட்பப்பாட நிலையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

மரவேலை மேசன் வேலை என்பன அடங்கிய நிர்மாணத் தொழில்நுட்பம் என்ற புதிய பாடத்தில் 99ஆம் ஆண்டிலிருந்து தோற்றிய தமிழ் மாணவர் தொகை தரப்பட்டுள்ளது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 18.12.1932

உதிர்வு 11.06.2004



அமரர்

## திருமதி தம்பிராசா தெய்வானைப்பிள்ளை

அல்லும் பகலும் கண் விழித்து ஆல்போல் நிழல் தந்து-எம்
பசிதீரப் பட்டினிகிடந்து அறிவும் செல்வமும் அளித்து-எம்மை
ஆளாக்கிவைத்த அன்புத் தாயே
உன் அன்புக்கும் அரவணைப்பிற்கும் ஈடாக
எதைக்கொடுப்போம் கண்ணீரைத்தவிர
எல்லாம் வல்ல இறைவனை வேண்டி-எம்
கண்ணீர் அஞ்சலியைக் காலடியில்
காணிக்கையாக்குகின்றோம்.

சாந்தி சாந்தி சாந்தி

11.07.2004 அன்று ஞாயிற்றுக்கிழமை மகன் முத்துராசாவின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுவதோடு இப் பொது அழைப்பினை தனி அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சென்ற 11.06.2004 அன்று எமது தாயாரின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்துதவியவர்களுக்கும் தொலைபேசி, அஞ்சல் மூலம் நேரில்வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் அனைத்து வழிகளிலும் உதவியவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

வேம்படி,
தாளையடி.

(4795)

---

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## 2ஆம் லெப்டினனட் சுபேந்திரன்

"கிருஷ்ணமூர்த்தி கலாகரன்"

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 05.08.1972 | 1..07.1992 |

"காலம் எல்லாம் எங்களோடு"
இருப்பாய் என்று காத்திருந்தோம் அண்ணா
கணப்பொழுதில் எங்களை
விட்டுமறைந்துவிட்டாய் அண்ணா
பன்னிரெண்டுஆண்டுகள் இன் டன் ஓடி மறைந்தும்
ஓயவில்லை எங்கள் கண்ணீரண் ணா
போர்களம் நோக்கி சென்றாய் அண்ணா
எம்மையெல்லாம் விட்டுச் சென்றாய்
உன் கனவோடு நாம் நடக்கிறோம்-எம்
தாகம் தீருமா

667 கொத்தம்பியாகுளம்,
துணுக்காய்.

உங்கள் நினைவில்
தம்பி (சீலன்)

(சி-10009)

---

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திரு.திருமதி நடேசு கோமளம் அவர்கள்

திதி: ஏகாதசி

| | |
|---|---|
| மலர்வு : 11.07.1946 | மலர்வு : 03.02.1946 |
| உதிர்வு: 03.04.2003 | உதிர்வு: 25.06.2003 |

அன்புத் தந்தையே! பாசமுடன் எமை வளர்த்தெடுத்த அன்னையே!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் ஆயிடினும் மறக்குமா
எம்நெஞ்சம் உம் நினைவை.

12.07.2004ஆம் திகதி எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக்கிரியையிலும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

இல:29,கல்மடுநகர்,
இராமநாதபுரம்.

(4779)

# ஆளுநர்கள் பதவி நீக்கம்

# இந்திய அரசியலுக்குப் புதிதல்ல

இந்திய மத்தியரசு அதிரடி நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டுள்ளது. நான்கு மாநிலங்களின் ஆளுநர்களைப் பதவியிலிருந்து தூக்கியுள்ளது. மத்தியரசின் இந்த நடவடிக்கை நான்கு மாநிலத்துடன் நின்றுவிடுமா.... தொற்று நோயாக ஏனைய மாநிலங்கள் சிலவற்றுக்கும் தாவுமா..... எனும் பரபரப்புத்தான் ஆட்சியைக் கலைப்பது என்பது மிகவும் தண்ணிபட்டபாடாகவே இருந்து வருகின்றது என்று புரிந்து கொள்ளவும் முடியும்.

அதுமட்டுமன்றி குடியரசுத் தலைவர் ஆட்சி பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு மாநிலங்களில் இதுவரை கிட்டத்தட்ட 100 முறை பிரகடனப்படுத்தப்பட்டிருக் அதிகாரம் என்பனவும் உண்டு.

இவற்றை விட முக்கியமான அதிகாரம் ஒன்றும் ஆளுநர் வசமுண்டு. அவசர சட்டம் பிறப்பிக்கும் அதிகாரம், சட்ட மன்றம் நடக்காத காலத்தில் சட்டங்கள் தேவையாயின் அதனைத் தானே பிறப்பிக்கும் அதிகாரம்.

அத்துடன் மாநில ஆட்சி கலைக்கப்பட்டு விட்டால் குடியரசுத் தலைவரின் ஆட்சி ஏற்படும் போது முழு அதிகாரம் கொண்ட வராக ஆளுநர் காட்சி அளிப்பார்.



ஓ.பி.சௌதாலா ஹரியானா முதலமைச்சர்



முலாயம்சிங் யாதேவ் உத்தரப்பிரதேச முதலமைச்சர்



நரேந்திரமோடி குஜராத் முதலமைச்சர்

கொண்டு மத்தியில் ஆட்சி அமைக்கப் போவதாக முலாயம் அறிக்கைகள் விட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது மூன்றாவது அணி என்பதன் மூலம் பிரதமர் பதவிக்குக் குறிவைத்தவர் முலாயம்சிங் என்று தான் கூறவேண்டும். இதனைக் காங்கிரஸ் கவனிக்காமல் இருந்திருக்க வாய்ப்பில்லை.

இதேபோல் குஜராத்தில் முதலமைச்சர் நரேந்திர மோடி இந்துத்துவா கொள்கையைக் கொண்டு முஸ்லிம்களைச் சித்திரவதைக்குள்ளாக்குவதாக மதச்சார்பின்மைக் கொள்கையுடைய காங்கிரஸ் சாடிவருகின்றது.

அது மட்டுமன்றி குஜராத்தில் ஏற்பட்ட கலவரந்தான் பாரதிய ஜனதாகட்சித் தோல்விக்குக் காரணம். என்று ஏற்க னவே வாஜ்பாய் குற்றம் சாட்டிய துடன் நரேந்திர மோடியைப் பதவிவிலக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார். அதாவது பாரதிய ஜனதாவே தனது கூட்டாளியான நரேந்திரமோடியைக் குற்றம் சாட்டியதுடன் பதவிவிலக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது. என்பது காங்கிரஸைப் தற்போது இந்தியாவை ஆழ்கின்றது.

இந்திய அரசியலில் ஆளுநர்களைப் பதவியிலிருந்து தூக்குவதும், மாநில ஆட்சியைக் கலைத்து விடுவதும் காலம் காலமாகப் பதவியேற்கும் புதிய அரசுகள் அதிரடியாக முதலில் மேற்கொள்ளும் நடவடிக்கை தான். இதனைத் தான் காங்கிரஸ் அரசும் மேற்கொண்டிருக்கின்றது.

இதேவேளை மத்தியரசின் அடுத்த அதிரடி நடவடிக்கை பாரதிய ஜனதா வசமுள்ள மாநில ஆட்சியைக் கலைத்து விடுவதா...... எனும் வினாவும் எழுந்திருக்கின்றது.

இதனை எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கூட்டணியும் ஒத்துக்கொண்டுள்ளது. ஆளுநர்களைப் பதவி நீக்கியுள்ள காங்கிரஸ் அடுத்து அம்மாநிலங்களையோ...... அல்லது ஏனைய மாநிலங்களையோ கலைத்து விடவும் முடிவு செய்துள்ளது. இது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.... என்று கூற முடிந்தது இதனால் தான்!

ஏனெனில் "தான் திருடன் பிறரை நம்பான்" என்பது பழமொழி. பாரதிய ஜனதா தாம் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்த போது ஆளுநர்களை வீட்டிற்கு அனுப்பியது. காங்கிரஸ் வசமிருந்த மாநில ஆட்சிகளைக் கலைத்திருக்கின்றது இவை பாரதிய ஜனதாவுக்கு ஒன்றும் புதிதல்ல. அதேபோல் காங்கிர ஸிற்கும் இத்தகைய நடவடிக்கைகள் மிகவும் பழமை வாய்ந்தவை தான்!

1989 இல் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிப்பீடமேறியவுடன் முதல் மேற்கொண்ட நடவடிக்கை காங்கிரஸ் ஆட்சியால் நியமிக்கப்பட்ட மாநில ஆளுநர்கள் பலரை வீட்டிற்கு அனுப்பியது தான்!

மீண்டும் இரண்டாண்டு கழித்து காங்கிரஸ் ஆட்சியமைத்த போது பாரதிய ஜனதா நியமித்த 14 ஆளுநர்களைப் பதவியிலிருந்து தூக்கியது.

இதேபோல் 1977 இன் பின்னர் ஆட்சிப் பீடமேறிய ஜனதா ஆட்சி, காங்கிரஸ் வசமுள்ள ஒன்பது மாநிலங்களை 356 ஆவது சட்டம் கொண்டு கலைத்தது.

மீண்டும் 1986 இல் காங்கிரஸ் ஆட்சியமைத்த போது பழி தீர்ப்பது போல ஜனதா ஆட்சி வசமிருந்த ஒன்பது மாநிலங்களைச் சரிக்குச் சமனாகக் கலைத்துப் பெருமிதம் காட்டிக்கொண்டது.

இதேபோல் 1992 இல் பாரதிய ஜனதா ஆட்சிபுரிந்த மாநிலங்களில் தடை செய்யப்பட்ட மதவாத அமைப்புடன் தொடர்பு இருந்ததாகவும் கரசேவா இயக்கத்திற்கு அயோத்தியில் கரம் கொடுத்ததாகவும் ஆட்சிகள் கலைக்கப்பட்டிருக்கின்றன.

எனவே மத்தியில் ஆட்சிப்பீடமேறும் கட்சிக்கு ஆளுநர்களைத் தூக்குவது, மாநில கின்றது என்பதும் விசித்திரம் தான்!.

மத்தியரசின் இந்த நடவடிக்கை எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கூட்டணிக்கு கசப்பை ஏற்படுத்தியிருப்பதில் தவறில்லை.

ஏனெனில் கோவா, ஹரியானா, உத்தரப் பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் ஆளுநர்களாக இருப்பவர்கள் பாரதிய ஜனதாக் கட்சியினரால் நியமிக்கப்பட்டவர்கள். இதனால்தான் ஆளுநர்களைப் பதவியிலிருந்து தூக்கியது அரசியலுக்கு விரோதமானது. காங்கிரஸின் கபடத்தனத்தைக் காட்டுகின்றது என்றெல்லாம் பாரதிய ஜனதா கூட்டணி பெரும் கடப்பாடு போட்டுக கொண்டிருக்கின்றது.

ஆனால் மத்தியரசோ ஆட்சியில் அரசியல் காரணத்துக்காக இவர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். அதனால் தான் பதவி நீக்கப்பட்டதாக மிகவும் சாதாரணமாக விளக்கமளித்துக்கொள்கின்றது. அதாவது முன்பு நீ செய்தாய் உன் ஆட்சியில். தற்போது நான் செய்கின்றேன் எனது ஆட்சி. என்று தான் கொள்ளவேண்டும்.

மாநில ஆளுநர்கள் இந்திய சனாதிபதியால் நியமிக்கப்படுபவர். சனாதிபதிக்கு வேண்டிய தகுதிகள் அனைத்தும் ஆளுநருக்கும் இருக்க வேண்டும் என்பது சட்டமாகும்.

ஆளுநர் ஐந்தாண்டு காலம் பதவி வகிக்க முடியும். ஆனால் சனாதிபதி விரும்பினால் ஆளுநரை வீட்டிற்கு அனுப்பும் அதிகாரம் இருக்கின்றது. அதாவது எந்தப் பாதுகாப்பும் இல்லாதவர் ஆளுநர்.

இதேவேளை மாநிலம் தொடர்பாக ஆளுநர் அதிகாரங்கள் பலவற்றையும் கொண்டிருப்பார். மாநில அரசு கொண்டு வரும் நிர்வாகம் தொடர்பான உத்தரவுகள் அனைத்தும் ஆளுநரால் தான் பிறப்பிக்கப்படும். அமைச்சரவை முடிவுகளும் ஆளுநரின் பெயரில் தான் வெளிவரும்.

சட்ட மன்றத்தில் நிதிநிலை மசோதா ஆளுநரின் பரிந்துரை இல்லாமல் அறிமுகப்படுத்த முடியாது. மானியம் தொடர்பாக மத்தியரசிடம் மாநில அரசு ஆளுநர் மூலம் தான் கோர முடியும். வரவு செலவுத் திட்டமும் அப்படித்தான்!

சட்டமன்றத்தைக் கூட்டும் அதிகாரம், உரையாற்றும் அதிகாரம் என்பனவும் சட்ட மன்றத்தில் இயற்றப்படும் எந்தச் சட்டமும் ஆளுநரின் ஒப்புதல் இன்றி செல்லுபடி ஆகாது.

அத்துடன் நீதிமன்றத்தால் தண்டனை பெற்றவர்களுக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம், நிலுவையுள்ள வழக்கில் கூட ஆளுநர் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கும்

இவற்றை விடமிக முக்கி யத்துவம் பெற்ற மாநிலம் தொடர் பான அதிகாரமும் ஆளுநர் வசமுண்டு.

தனது மாநில அரசு அரசியல் சட்டம் வகுத் துள்ள வழிப்படி இயங்க இய லாத சூழல் உருவாகி விட்டதாக ஆளுநர் சனாதிபதிக்கு ஓர் அறிக்கை கொடுத்தால் போதும் மாநில முதலமைச்சரின் பதவி காலியாகும்.

இவ்வாறு மாநிலஆளுநர் மாநிலத்தின் நிர்வாகம், நிதி, சட்டம், தண்டனைக் குறைபபு எனும் அனைத்து அதிகாரங்களிலும் செல்வாக்குச் செலுத்தினாலும், இந்திய மாநிலங்களில் ஏனோ மாநில ஆளுநர்கள் அவ்வளவாக ஜொலிப்பதில்லை. அலங்கார மேடையில் கொலுவைத்த பொம்மை போல் தான் செயற்பாடுகள் அமைந்திருக்கும்.

மாநில முதலமைச்சர் தமது முடிவுகளைச் செயற்படுத்தி விட்டதாக முடிவு எடுத்த பின்னர் ஆளுநரின் கையொப்பம் ஒன்றிற்காகவே அவரை நாட வேண்டியுள்ளதே தவிர, ஆளுநரிடம் எதுவித முடிவுகள் பற்றியும் கலந்தாலோசிப்பதில்லை எனலாம்.

இருந்தபோதும் தற்போது நான்கு மாநில ஆளுநர்களை மத்தியரசின் சிபார்சில் இந்திய சனாதிபதி அப்துல் கலாம் பதவியிலிருந்து தூக்கியுள்ளார்.

அதுமட்டுமன்றி பதவி நீக்கப்பட்ட ஆளுநர்களின் பொறுப்புக்களை மகாராஷ்ரம் மத்தியபிரதேசம், பஞ்சாப், உத்தராஞ்சல் ஆளுநர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கோவா,ஹரியானா, உத்தரப்பிரதேசம், குஜராத் ஆகியவற்றின் ஆளுநர்கள் நால்வரும் பாரதிய ஜனதாக் கட்சியினருக்கு ஆதரவாக இருக்கின்றார்கள் என்பது காங்கிரஸ் கட்சியின் மறைமுகமான குற்றச் சாட்டு.

ஏற்கனவே உத்தரப்பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு சீரில்லை என்று உத்தரப் பிரதேச அமெதித் தொகுதியில் வெற்றி யீட்டிய ராகுல்காந்தி கூறியுள்ளார். அதனை காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியும் ஆமோதித்திருந்தார். என்பது கவனிக்கத் தக்கது.

இதனையடுத்து உத்தரப்பிரதேச முதலமைச்சர் முலாயம்சிங் யாதேவ் எனது அரசை முடிந்தால் மத்தியரசு கலைத்துப் பார்க்கட்டும். என்று சவால் விடுத்துள்ளார்.

அதுமட்டுமன்றி மக்களவைத் தேர்தல் காலத்தில் மூன்றாவது அணியைக் பொறுத்தவரையில் சாதகமாகவே இருக்க முடியும். இதேபோல் ஹரியானா கோவா மாநிலங்களில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சிப் பீடமேறியுள்ளது.

இங்கு ஆளுநர்களாக இருப்பவர்கள் முன்பு பாரதியஜனதாவினரால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

அதனால் தான் காங்கிரஸ் ஆளுநர்களைப் பதவி நீக்கியதாகக் கருதப்படுகின்றது. இதேவேளை பாரதிய ஜனதாவின் தேசிய ஜனநாயகக் கூட்டணி பாராளுமன்றக் கூட்டத்தொடர்களை இனிப் புறந்தள்ளப்போவதில்லை என்று கூறியுள்ளது. இதற்குக்காரணம் இல்லாமலில்லை என்று விமர்சிக்கப்படுகின்றது. ஆளுநர்களைப் பதவிநீக்கம் செய்தது போலவே மத்தியரசு தனது வசமுள்ள மாநில ஆட்சிகளையும் கலைத்து விட முடியும்.

ஆனால் மாநிலங்களவையிலும். மக்களவையிலும் ஒப்புதல் பெற்ற பின்னரே மாநிலஆட்சியைக் கலைக்க முடி

**அ.கலைவாணி**

யும்.இரு அவைகளிலும் ஒப்புதல் கிடைக்காது போனால் கலைக்கப்பட்ட மாநில அரசு மீண்டும் பதவி ஏற்கமுடியும்.

இதனால் தான் பாரதியஜனதாக் கூட்டணி இனிப் பாராளுமன்றத்தைப் புறக்கணிக்கப் போவதில்லை என்று பல்டி அடித்துள்ளது. ஏனெனில் இருஅவைகளிலும் பங்கு கொண்டால்தான் மாநில ஆட்சி கலைப்பது பற்றி மத்தியரசு முடிவு எடுத்தால் அதனை மறுக்கமுடியும் என்பது ஒன்று.

இரு அவைகளையும் தொடர்ந்து புறக்கணிப்பது என்பது காங்கிரஸ் அரசு மாநிலங்களவையைக் கலைத்து விடுவதற்கு மிகவும் சாதகமாக அமைந்து விடவும் கூடும் என்பது இரண்டாவது.

எனவே மத்தியரசின் அடுத்த நடவடிக்கை குறித்து எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கூட்டணி இமைமூடாது விழிப்பாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

என்றாலும் காங்கிரஸ் அரசாங்கம் பதவி நீக்கப்பட்ட ஆளுநர்களது மாநிலங்களைத் தான் குறிவைத்துள்ளதா... அல்லது வேறு மாநிலங்கள் மீது கண் வைத்துள்ளதா... என்பதைக் காங்கிரஸின் எதிர்கால நடவடிக்கைகள்தான் வெளிக்காட்டப் போகின்றது என்றே கூறவேண்டும்.

## பதின்மூன்றாம் ஆண்டுநினைவில்...

தோற்றம்
19 ★ 02 ★ 1964

வீரச்சாவு
11 ★ 07 ★ 1991



# கப்டன் வானதி

(பத்மஜோதி சண்முகநாதபிள்ளை)

"எழுதாது செல்லும் என்
கவிதையை எழுதுங்களேன"
என்றெம் விழி உரசி,
உப்பளம் மேவிய
கப்டன் வானதியே...
உம்வழியில் நாம்.

கப்டன் வானதி வெளியீட்டகம்
தமிழீழம்

(சி-10010)

## கால்வாய் நோய்க்கு தடுப்பூசி

(ஒட்டுசுட்டான்)

கால்வாய் நோய்க்கான தடுப்பூசி மருந்து வந்துள்ளபடியால் வன்னிப்பகுதியில் உள்ள கால்நடைப் பிரிவுகள் அனைத்தும் தீவிரமாக தடுப்பூசி மருந்துகளை ஏற்றிவருகின்றன. எனவே கால்நடைவளர்ப்போர் தங்கள் பகுதியிலுள்ள கால்நடை வைத்திய நிலையத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினரும், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் கேட்டுக்கொள்கின்றனர். (05)

## பண்ணையாளர் கௌரவிப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினரும், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் இணைந்து நடாத்தும் சிறந்த பண்ணையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி காலை 10.30 மணியளவில் ஒட்டுசுட்டான் கால்நடை வைத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது எனக் கால்நடை வைத்தியர் சு.கஜரஞ்சன் தெரிவித்தார். (05)

## கிளை திறப்பு

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பூநகரிப் பிரதேசக்கிளை நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வாடியடியில் திறந்துவைக்கப்படவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## நினைவழியா நினைவுகளில்...

### 13 ஆம் ஆண்டு நினைவுகளைச் சுமந்து

ஜனனம்
05 ◻ 01 ◻ 1975

வீரமரணம்
11 ◻ 07 ◻ 1991



# வீரவேங்கை குட்டியா

விஸ்வலிங்கம் சாந்தநாயகி
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

பகைகொண்ட சூழ்ச்சியால்
பறந்தோடிவந்து பாரினில் புகழ்தேட
பசியையும் மறந்து பால்வடியும் முகத்துடன்
பெருந்தலைவன் வழிதனில் பெருமையோடு புலியாகிய
அன்புத் தங்கை குட்டியாவே
அன்னைமண்மீட்க ஆனையிறவுக் களத்தினில்
ஆடிய பகைவனை அடக்கிட
ஆகாயக் கடல்வெளிச்சமரினில்
களமாடி விதையாகிய அன்புத் தங்கையே
விதையாகி வீழ்ந்தவளே முளையாகி எழுவாய்
என் விழிகளிலே வாழ்கின்ற துளிநீரில் வாழ்வாய்
தாயகம் விடியும் வரை உன் நினைவுகளைச்
சுமந்து தொடர்வேன் உன்பணி.

என்றும் உன் நினைவுடன்
அக்கா குட்டியா (போராளி)

(4791)

## 3ஆம் ஆண்டு நினைவுகளில்...

தாயை விட தாய்மண்ணை நேசித்து
தானைத்தலைவன் சேனைதனில்
புலியாகிப்போராடி
காடு தனிலே புயலென புரிய வைத்த
செழியனே!
நீ மறைந்து ஆண்டுகள் மூன்று
ஆனாலும் மறையாத உன்
நினைவுகளுடன்...

இந்நாளில் அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருவதுடன் இவரது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கள்ளப்பாடு.
முல்லைத்தீவு.

உன் நினைவினில்...
குடும்பத்தினர்
(எ.றெக்ஷன்)



தாயின் மடியில்
08-09-1976

தாயக மண்ணில்
11-09-2001

(சி-9142)

# கப்டன் முல்லைச்செழியன்/சுடர்மணி

(ஜோசேப் எட்வேட் அலெக்ஸ் பிரதீபன்)

சம்பவம்: மட்டு.தாண்டியடிப்பகுதியில் எதிர்பாராத மோதலின்போது

# 01 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## 11-07-2004

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் வசிக்கும் உதயசங்கர்-அனுரா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அனுசங்கர்(யுகாஷ்) தனது முதலாவது பிறந்தநாளை 11-07-2004 இன்று தனது தற்போதைய இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா மற்றும் லண்டனில் வசிக்கும் மாமாமாரான ராஜ்மோகன், ராஜ்குமார், ராஜ்காந்; அத்தான்மாரான லவன், நிசாந், ரவிசங்கர், ஆகாஷ்; அத்தைமாரான உதயசாந்தினி, உதயரஞ்சினி, லக்சாயினி, தட்சாயினி மற்றும் மாமா விஜயராசா, சித்தப்பா குலசங்கர், மச்சாள் அபியுகா மற்றும் மாமிமாரான வாசுகி, ரஜிதா ஆகியோர் காளியம்மன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழவாழ்த்துகின்றார்கள்.

த.மு:
4ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

தகவல்:
பெற்றோர்.



# உ.அனுசங்கர் (யுகாஷ்)

(4664)

# 600 கோடியைத் தாண்டி நிற்கும் மனித இனம் எதிர்கொள்ளும் சவால்கள்!

**முத்தையனூர் ப. துஷ்யந்தன்**

600 கோடியினைத் தாண்டி நிற்கின்ற பூமியின் மனித ஜீவன்களின் எண்ணிக்கையால் உலகம் பல சவால்களை எதிர்கொண்டு நிற்கிறது. அதிகரித்த அறிவியற் தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சிகளின் பயனாக மனித வாழ்வில் ஆரோக்கியம் மேம்பட்டமையால் ஆயுட் காலம் நீடிக்கப்பட்டமை உலக சனத்தொகையின் வளர்ச்சி வீதம் அதிகரித்துச் செல்கின்றமைக்கு முக்கிய காரணியாக இருக்கிறது.

உலக ஜீவராசிகளில் மேம்பட்ட வல்லமையுள்ள மனித இனம் இன்றைய நவீன யுகத்திற் பல சிக்கல்களை எதிர்கொண்டு தன் வளர்ச்சிப் படிகளை தாண்டிச் செல்கின்றது என்பது கண்கூடு. வளங்கள் குறைவடைந்து செல்கையில் சனத்தொகை அதிகரிப்பு பெரும் சவாலாகவே உள்ளது.

உலகின் மனித வாழ்விடங்களை மனிதனே தரம்பிரித்துப் பார்க்கின்ற நிலைமைகளினால் மனிதரிடையே காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கின்றதே தவிர குறைவடைவதாகத் தெரியவில்லை.

நாடு என்ற அடிப்படையிலும் மற்றும் மொழி, இனம் மதம் என்ற பல்வேறு பிரிவுகளைத் தன்னகத்தே வளர்த்துக் கொண்ட மனிதன் ஒருவரை ஒருவர் தாக்கியும், இம்சைப்படுத்தியும், ஒடுக்கியும் வாழ முற்படுவதானது மனிதப் பிறப்பின் மகத்துவத்தையே கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது.

பல்வேறு பிரிவினைகள் மத்தியிலும் பிளவுபட்டிருக்கின்ற மனித சமுதாயம் சனத்தொகைப் பெருக்கம் என்ற நிலையில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது.

அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்ற அடிப்படையில் பொருளாதார நிலையினை அடிப்படையாக வைத்து பிரிவு பட்டு நிற்கின்ற உலகம் பொருளாதாரப் பரம்பலினைச் சரியான முறையில் மேற்கொள்ளாத நிலையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அதிகரித்துவரும் சனத்தொகை பெருக்கத்திற்கேற்ப அவர்களுக்கான அடிப்படை வசதிகளை நிறைவு செய்ய முடியாமல் இருக்கின்ற நிலையில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மிதமிஞ்சிய நிலையில் தமது பொருளாதாரத்தை வளர்த்திருக்கின்ற நிலை காணப்படுகிறது.

உலகசனத்தொகைப் பெருக்கத்தில் அதிக முன்னணியில் இருக்கின்ற நாடுகளைப் பார்ப்போமேயானால், கூடுதலாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளே காணப்படுகின்றன. இந்நாடுகளின் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப அந்நாடுகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையே காணப்படுகின்றன. குறிப்பாக, ஆபிரிக்கா, இந்தியா போன்ற அபி விருத்தி அடைந்துவரும் நாடுகளின் நிலைமைகளை அவதானிக்கின்றபோது, இந்த நாடுகளின் அபிவிருத்திக்குப் பெரும் தடையாக இருப்பது சனத்தொகைப் பெருக்கம். இந்த சனத்தொகைப் பெருக்கத்திற்கு முக்கிய காரணமாக அமைவது,

01) கல்வி அறிவு போதாமை

02) மருத்துவ வசதிகளின் சீரற்ற தன்மை

03) இளவயதுத் திருமணங்கள்

04) குடும்பக் கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வு இன்மை

05) குடும்பக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் இன்மை போன்றன முக்கியமானவை.

ஒரு நாட்டின் பிரஜை தனது குடும்ப எதிர்காலம் பற்றியும் தனது நாட்டு முன்னேற்றம் பற்றியும் அக்கறை கொண்டு செயற்படுவதற்கு கட்டாயமாக அவனுக்குக் கல்வி அறிவு என்பது இன்றியமையாதது. அக்கல்வி அறிவு நாட்டு பிரஜைகளிடம் இல்லாமல் இருக்கின்ற போது அவ்விடயம் நாட்டு முன்னேற்றத்தை வெகுவாகப் பாதிக்கும் என்பது கண்கூடு.

அடுத்து மனித வாழ்வின் இன்றியமையாத தேவையாக விளங்குவது மருத்துவத் தேவை. இந்த மருத்துவத் தேவை எவ்வாறு சனத்தொகைப் பெருக்கத்தில் தாக்கம் செலுத்துகிறது என்று பார்க்கின்றபோது மனிதப் பிறப்பின்போதே பல்வேறு நோய்களும் படைக்கப்பட்டிருக்கின்றபோது மனித பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற பெரும் சக்தியாக இந்த நோய்கள் காணப்படுகின்றன.

ஆகவே, இந்த நோய்களிற்கான தடுப்புகளை மருத்துவத்துறை செய்து வருகின்ற நிலையிலே சனத்தொகைப் பெருக்கம் அசாதாரணமாக வளர்ச்சி கண்டு வருகின்றது என்பதனைக் குறிப்பிடலாம். ஆனால், இந்த மருத்துவத் துறையின் வளர்ச்சியானது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைப் பொறுத்தவரை சனத்தொகைப் பெருக்கத்திற்கான காரணியாகக் காணப்படுகின்றதே தவிர சனத்தொகையினைக் கட்டுப்படுத்தும் மருத்துவ அறிவுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் விருத்தி செய்யப்படாமை பெரும் குறையாகவே உள்ளது.

அடுத்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஒரு காரணமாக இருப்பது இள வயதுத் திருமணங்கள் திருமண வயதை அடையாமலே இளவயதில் திருமணங்கள் நடைபெறுவதாலும் அதிகளவு குடும்ப அங்கத்தவர்கள் தொகை காணப்படுகின்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு முக்கிய காரண்மாகக் கல்வி அறிவின்மை பழமை வாதக் கொள்கைகள் என்பன மூல காரணமாக அமைகின்றன. இந்தியா போன்ற நாடுகளில் இளவயதுத் திருமணங்களை ஊக்குவிப்பதற்கான மரபு சார்ந்த மூடப் பழக்க வழக்கங்கள் தாராளமாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த விடயம் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அறிவின்மை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சனத் தொகைப் பெருக்கத்திற்கு முக்கிய காரணமாக உள்ளது.

குடும்பக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் நடைமுறையில் இல்லாத பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் சனத்தொகை வீக்கத்தால் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றன. சீனா போன்ற மக்கள் தொகை கூடிய நாடுகள் குடும்பக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மிகத்தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருவதால் அபிவிருத்தியில் துரித வளர்ச்சி கண்டு வருகின்றமையை அவதானிக்கலாம்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி அபிவிருத்தி கண்ட முன்னணி நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சியை மட்டுப்படுத்தி தமது நாட்டில் தங்கி வாழக்கூடியதாகத் திட்டங்களை வகைப்படுத்தி நடைமுறைப் படுத்தி, வருவது உலக ஏற்றத்தாழ்வுகளுக்கு முக்கிய காரணியாக உள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளங்களைச் சுரண்டுவதற்கும் இந்நாடுகளில் தமது மேலாண்மையைத் திணிப்பதற்காகவும் திட்டமிட்டு செயற்பட்டு வரும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைத் தொடர்ந்தும் வறுமை நிலையில் வைத்திருக்கவே விரும்புகின்றன. இதற்காகவே, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார நிலமைகளை மட்டுப்படுத்தியும் சனத்தொகை வளர்ச்சியினை அதிகரிக்கச் செய்யவும் இந்நாடுகள் பல செயற்திட்டங்களை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நடைமுறைப்படுத்த எத்தனிக்கும் போக்கானது உலக குடிசனப் பெருக்கம் என்பதை விட மக்களைப் பட்டினிச் சாவுக்கு இட்டுச் செல்லும் வழி வகையாகவே உள்ளது.

## இன்று உலக சனத்தொகை தினம்

# துப்பாக்கிகளை திருடிய பொலிசாருக்கு சிறை!

(கொழும்பு)

துப்பாக்கிகளைத் திருடிய பொலிஸ்காரர் ஒருவருக்கு ஐந்து வருட சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

சந்திரசேகர பண்டார ஹபுகொட என்ற இப்பொலிஸ் உத்தியோகத்தர் உஹன பொலிசில் கான்ஸ்டபிளாகப் பணியாற்றியவர் என்றும் இரண்டு -56 ரகதுப்பாக்கிகளைத் திருடி வைத்திருந்தமை மற்றும் பொது மக்களை அச்சுறுத்தியமை போன்ற குற்றங்களுக்காக அம்பாறை உயர் நீதி மன்றத்தினால் ஐந்து வருட கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. அத்துடன் இரண்டு ஆயுதங்களின் பெறுமதி விலையான 84,759 ரூபாய்களை தண்டப்பணமாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

### கோரிக்கை

சர்வதேச நாடுகள் சிறிலங்காவில் முதலீடு செய்வதிலிருந்து விலகிக்கொள்ளத் தேவையில்லையென ஜே.வி.பி.யின் பாராளுமன்ற குழுத்தலைவர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார். குண்டுத்தாக்குதல் சமாதான பேச்சுக்களை பாதிக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

## 7ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தாயின் மடியில்
10 ☆ 05 ☆ 1970



தாயக மண்ணில்
11 ☆ 07 ☆ 1997

அமரர்

**வேலாயுதம் சுரேஸ்குமார்**

**(சோ/குணம்)**

கரவெட்டிமத்தி

சோஅண்ணா!

எங்களை அன்போடும் பண்போடும்
சீரோடும் சிறப்போடும் வாழ வைத்து
இரவு பகல் பாராது எமக்கு உலக அறிவு
கற்றுத் தந்த புத்தி ஜீவனே
சோஅண்ணா உங்கள் இன்முக சிரிப்பும் நடையும்
நீங்கள் எம்முடன் இருப்பது போன்றுள்ளது
ஆனால் எம்மை விட்டு எழு ஆண்டுகள் கரைந்து
விட்டன கனவுபோல் உள்ளது ஆனால் நனவு
என்பதை மனது ஏற்க மறுக்கிறது.

உங்கள் பிரிவை நம்பமுடியாத
நண்பர்கள்.

(4792)

அவுஸ்திரேலிய-சிறிலங்கா இறுதி டெஸ்ட் போட்டி

# சங்கக்கார, அத்தப்பத்து சிறப்புத்துடுப்பாட்டம் சிறிலங்கா அணி இஸ்திரமான நிலையில்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக கெய்ன்ஸில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று தனது முதல் இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் சிறிலங்கா அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்று இஸ்திரமான நிலையில் உள்ளது.

அவுஸ்திரேலிய அணி அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 517 ஓட்டங்களைப்பெற்றது.

இரண்டு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 370 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேற்றுக்காலை தனது முதல் இனிங்சைத் தொடர்ந்த அவுஸ்.அணி மூன்றாவது விக்கெட்டை மொத்த ஓட்ட எண்ணிக்கை 392 ஐப் பெற்றிருந்த போது இழந்தது.

லஸ்ரின் லாங்கர் 162 ஓட்டங்களைப்பெற்ற போது மாலிங்கவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அவுஸ். அணி மொத்தமாக 454 ஓட்டங்களைப்பெற்றிருந்த போது டேமியன் மாட்டின் 97 ஓட்டங்களுடன் உபுள் சந்தனவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இதனைத் தொடர்ந்து அவுஸ்தி ரேலியாவின் கடைசி 6விக்கெட்டுக்களும் 31 ஓட்டங்களுக்கு வீழ்த்தப் பட்டது.

பந்துவீச்சில் உபுள்சந்தன 109 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் லசித் மாலிங்க 149ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தின ர். சமிந்தவாஸ்,சொய்சா ஆகியோர் சிறப்பாக பந்து வீசிய போதும் விக்கெட் எதனையும் கைப்பற்ற முடியவில்லை.

இதனை அடுத்து முதல் இனிங்சை ஆரம்பித்த சிறிலங்கா அணி அதன் முதலாவது விக்கெட்டை குறைந்த ஓட்டத்தில் இழந்தது. சனத் ஜெயசூரியா கிளெஸ்பியின் பந்து வீச்சில் 13ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக அணித்தலைவர் அத்தப்பத்து, சங்கக்காரவுடன் இணைந்து 138 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை இஸ்திரமான நிலைக்கு இட்டுச் சென்றார். குமார் சங்கக்கார 74 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஷேன்வோர்னின் பந்து வீச்சில்



கிளெஸ்பியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது அத்தப்பத்து 75 ஓட்டங்களையும், ஜெயவர்த்தன ஓட்டம் எதுவும் பெறாதும் களத்தில் இருந்தனர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# இந்தியா செல்லும் அவுஸ்., தென்னாபிரிக்க அணிகளுக்கான போட்டி அட்டவணை விரைவில்

## இந்திய கிரிக்கெட் வாரியம்

அவுஸ்திரேலிய,தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் தொடருக்கான திகதி போட்டி நடைபெறும் இடங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4டெஸ்ட் மற்றும் தென்னாபிரிக்காவிற்கு எதிரான 2டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இவ்வருட கடைசியில் இந்தியா விளையாடவுள்ளது. இந்த டெஸ்ட் தொடர் நடைபெறும் திகதி, இடங்கள் வரும் 18 மற்றும் 19ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறவுள்ள கிரிக்கெட் வாரிய செயற்குழுக் கூட்டத்தின் போது அறிவிக்கப்படும் என்று கிரிக்கெட் வாரிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தென்னாபிரிக்க அணி வரும் நவம்பர் மாதம் இந்தியா வர திட்டமிட்டுள்ளது. இந்தத் தொடருக்கான போட்டி அட்டவணை குறித்து தென்னாபிரிக்கா சந்தேகம் எழுப்பி இருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளுக்கு பதிலளித்த கிரிக்கெட் வாரிய தகவல்கள் மேற் கூறியவாறு தெரிவித்துள்ளன.

தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கு இடையேயான போட்டி அட்டவணை குறித்து தங்களுக்கு இதுவரை எந்த விதத் தகவலும் வரவில்லை என்று ஒருங்கிணைந்த தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரிய கிரிக்கெட் விவகார மேலாளர் பிறையன் பாஸ்சன் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கு எதிரான போட்டிகள் நடைபெறும் இடங்கள் அகில இந்திய சுழற்சி முறையில் நடைபெறவிருக்கும் செயற்குழுக் கூட்டத்தில் ஒதுக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கலிபோர்னியாவில்...



ஒலிம்பிக் தகுதிகாண் 100, 5000 மீற்றர் போட்டிகளில் கலந்துகொள்ளும் கெயில் டிவெஸ், ஜெனிபர் றினேஸ்.

# சுவிஸ் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் அரையிறுதிக்கு ரோஜர் பெடரர் தகுதி



சுவிற்சர்லாந்தில் நடைபெற்று வரும் சுவிஸ் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் விளையாட உலகின் முன்னணி வீரரும் சுவிஸ் வீரருமான ரோஜர் பெடரர் தகுதி பெற்றுள்ளார்.

. சுவிற்சர்லாந்தின் ஜீடோட் நகரில் நடைபெற்று வரும் இப் போட்டியில் உலகின் முன்னணி டென்னிஸ் வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கால் இறுதியாட்டம் ஒன்றில் விம்பிள்டன் சம்பியனும் உலகின் முதல்தர வீரருமான பெடரர் செக்குடியரசின் ஸ்ரீபன் மெக்கை எதிர்கொண்டார்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் 6-1,5-7,6-4 என்ற செட்டில் மெக்கை தோற்கடித்த பெடரர் அரையிறுதிக்கு முன்னேறினார்.

## கரப்பந்தாட்டசுற்றுப்போட்டி

வடக்கு-கிழக்குமாகாண விளையாட்டுத்திணைக்களம் நடாத்தும் மாகாணமட்டக் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அம்பாறையில் நடைபெறுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களத்தால் மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் வெற்றிபெற்ற ஆண்,பெண் அணிகளுக்கான மாகாணமட்டப் போட்டியே அம்பாறையில் நடைபெறுகின்றது. இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக வவுனியா மாட்ட ஆண், பெண் அணிகள் வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு.சி.அண்ணாத்துரை தலைமையில் அம்பாறைக்குச் சென்றுள்ளன. (10)

# இந்தியவெற்றியின் இரகசியம் ஆக்ரோஷமான விளையாட்டே

## அணித்தலைவர் கங்குலி

கிரிக்கெட் உலகில் முதல் இடத்தைப் பிடிக்கவேண்டும் எனில் அவுஸ்திரேலிய அணி போல் தொடர்ச்சியான வெற்றிக ளைப் பெறவேண்டும் என்று இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.கங்குலி அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் தெரிவித்துள்ளதாவது;

இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணம் ஆக்ரோஷமாக விளையாடுவதுதான்... இந்திய அணியின் தலைவராகக் கடந்த சில வருடங்களாக நான் இருந்து வருகிறேன். வீரர்கள் ஆக்ரோஷப்படும் போதெல்லாம் இந்திய அணி சிறப்பாக விளையாடி வந்துள்ளது. இதை நான் பலமுறை உணர்ந்திருக்கிறேன். இதைத்தான் நான் வீரர்களின் மனதில் பதிய வைக்க முயற்சிகளை எடுத்தேன். உண்மையைச் சொல்லவேண்டும் எனில், சும்மா உட்கார்ந்துகொண்டு அணிக்குத் தேவையில்லாத விஷயங்களை சிந்திப்பவன் நான் அல்ல. அணிக்கு சரி என்றால் அதை செயற்படுத்திக்குறைகளை நீக்க முயற்சிக்கும் எண்ணம் என்னிடம் உண்டு என்று கூறினார்.

சர்வதேச கிரிக்கெட் உலகில் முதல் இடத்தைப்



GANGULY

பிடிக்க வேண் டும் எனில் இந்திய அணி எத்தகைய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்ற கேள்விக்குப் பேட்டியின்போது பதிலளித்த கங்குலி, இது மிகவும் எளிதானது. முதல் இடத்தில் இருக்கும் ஆஸி. அணியைப்போல தொடர்ச்சியாக வெற்றிகளைக் குவித்துச் சிறப்பாக விளையாடவேண்டும். கடந்த சில வருடங்களாக ஆஸி. அணி தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது. டெஸ்ட் போட்டிகளில் கடந்த 4 வருடங்களாக ஆஸி. அணிக்கு எதிராக நாம் சிறப் பாக விளையாடி வருகிறோம் என்பது உண்மைதான். ஆனால் ஒரு நாள் போட்டிகளில் ஆஸி. அணியின் ஆதிக்கம் நம் மீது இருந்து வருவதை மறுக்க முடியாது.

2002 இலும், 2003 இலும் ஆஸி. அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் நம்முடைய திறமை வெளிப்பாடானது சர்வதேச அளவில் நம்மீது தனி மரியாதையை ஏற்படுத்திவிட்டது என்று கூறினார்.

சமீபகாலமாக இந்திய அணி மிகச் சிறப்பாக விளையாடி வருவதற்குத் தானே முழுக் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்த கங்குலி இது குறித்துக் கூறுகையில், நாம் சிறப்பாக விளையாட ஆரம்பித்ததற்கும், நான் அணித் தலைவர் பதவிஏற்றதும் ஒரு காலத்தில் நடந்துவிட்டது. எனவே இதற்குநான் மட்டுமே முழுக் காரணமென்று கூறிவிடமுடியாது. அணியில் இடம்பெற்று இருக்கும் வீரர்களின் தரம் மிக மிகச் சிறப்பாகவுள்ளது என்றார்.

# மாவீரர் லெப்.சீலன் நினைவாக 5 பேர் கொண்ட கால்பந்துப் போட்டி

மூத்த தளபதி லெப்டினன்ட் சீலன் நினைவாக திருகோணமலை மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவில் திருகோணமலை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கம் 05பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை திருகோணமலை மக்ஹெய்ஸர் விளையாட்டரங்கில் நடத்தவிருக்கிறது. ஜூலை 14,15ஆம் திகதி நடைபெறவிருக்கும் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தங்கள் விண்ணப்பங்களை திருகோணமலை உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் எஸ். யோகரட்ணத்திடம் ஜூலை 12ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு ஒப்படைக்கும் படி கோரப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைக்காகப் போராடி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர் லெப். சீலன் (சாள்ஸ்அன்ரனி) நினைவாக இச்சுற்றுப் போட்டி நடத்தப்படுகிறது. தமிழீழ விளையாட்டுத்துறை திருமலை மாவட்டப் பொறுப்பாளர் தீபன் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.




# வவுனியாவில் பெண்களுக்கான 2ஆம் கட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள்

வடக்கு-கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப்போட்டியின் பெண்களுக்கான பெருவிளையாட்டுக்கள் வவுனியாவில் நடைபெற்று வருகின்றன இதனடிப்படையில் கடந்த புதன்கிழமை (07-07-04) நடைபெற்ற எல்லேப் போட்டியில் முதலாம் இடத்தை மட்/செங்கலடி மத்திய கல்லூரியும்,இரண்டாம் இடத்தை அம்/நமல்தலாவ ம.வி.யும், மூன்றாம் இடத்தை திரு/அபேயபுர ம.வி.யும் பெற்றுக்கொண்டன, நேற்று முன்தினம் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் 19வயதின் கீழ் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அம்/D.S.சேனநாயக்க ம.வி.யும், இரண்டாம் இடத்தை அம்/நுவரகலதென்ன ம.வி.யும், மூன்றாம் இடத்தை மட்/சிசிலியர் மகளிர் ம.வி.யும் பெற்றுக்கொண்டன.

17வயதின் கீழ் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அம்/D.S.சேனநாயக்க ம.வி.யும், இரண்டாம் இடத்தை அம்/தெமட்டமல்பல்ச வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை திரு/மிகிந்தபுர வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. 15வயதின் கீழ் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அம்/சண்டமடுல்ல ம.வி.யும், இரண்டாம் இடத்தை அம்/குலது ம.வி. யும்,மூன்றாம் இடத்தை திரு/சிறிசுமேடங்கரா ம.வி.யும் பெற்றுக் கொண்டன. (10)

## சிந்தனைக்கு



தர்மமும் உண்மையும் எம்பக்கம் சார்ந்திருக்கின்றன; அதுவே எமது பலம், அதர்மமும்-பொய்மையும் எதிரியின் பக்கம்சார்ந்திருக்கின்றன; அதுவே அவனின்பலவீனம். ஈற்றில்வெற்றி கொள்வது நாம்;ஏனெனில் என்றுமழியாத தர்மம் எமக்குப் பக்க பலமாக இருக்கின்றது

தமிழீழதேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 11-07-2004
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

# உரிமைக்கான போர்!

மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, மனித உரிமைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதன் அடிப்படை அம்சம்தான் இப் போராட்டமும், அதன் விளைவுகளும் என்ற செய்தி கூட உலகிற்குச் சரியான வகையில் கொண்டு சேர்க்கப்படவில்லை என்ற அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் கவலையானது அர்த்தப்பாடு உள்ளதொன்றே ஆகும்.

ஏனெனில், விடுதலைப்புலிகளுடனான சந்திப்புக்களை நடாத்தும் மனித உரிமை அமைப்புக்களும், மேற்குலக இராஜதந்திரிகளும் அடிக்கடி வலியுறுத்தும் விடயமாக இருப்பது 'மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்'என்பதாகவே உள்ளது. ஆனால், மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் விடுதலைப் புலிகளுக்கு அக்கறையோ ஆர்வமோ இல்லை என்பதல்ல. தமிழ் மக்களும் மனித உரிமைகள் பற்றித் எதுவுமே அறியாதவர்களும் அல்ல.

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டமானது தமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதை தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டதன் விளைவே ஆகும். ஆகையினால், உரிமைக்காகப் போராடுகின்றவர்களுக்கு மற்றவர்களின் உரிமைகள் பற்றித் தெரியாமல் இருப்பதற்கு நியாயம் இல்லை. ஆனால், தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிப் பேசும்போது மனித உரிமைகள் பற்றிய பேச்சு முன்னெடுக்கப்படாமல் போவதுதான் முக்கியமான விடயமாகும்.

தமிழ் மக்கள் தமது ஆயுதப் போராட்டத்தை தமது உரிமைகள் மறுக்கப்பட்டதன் காரணமாகவே தொடங்கியவர்கள். சிங்கள அரசியல் கட்சிகள் ஆட்சி அதிகாரத்திற்காகப் போட்டியிட்டதுபோல், தமிழ்மக்களோ, தமிழ் அரசியற்கட்சிகளோ ஆட்சி அதிகாரத் திற்காகப் போட்டியிடவில்லை. அதேபோன்று சிங்களக் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான இனவாதத்தைக் கையில் எடுத்தபோது தமிழ் மக்களோ, தமிழ் அரசியல் தலைமையோ இனவாதத்தைக் கையில் எடுக்கவில்லை.

படிப்படியாக மொழியுரிமை, கல்வியுரிமை, பாதுகாப்பு என்பன மறுக்கப்பட்டும், கேள்விக்குள்ளானபோதுமே தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடத் தொடங்கினர். அதாவது, தனிச் சிங்கள மொழிச் சட்டம், பல்கலைக்கழக அனுமதியில் பாராபட்சம், அபிவிருத்தியில் புறக்கணிப்பு, இனக்கலவரங்கள், ஒடுக்கு முறைச் சட்டங்கள், அரச பயங்கரவாதம் என்பனவற்றின் தொடராகவே தமிழ்மக்கள் ஆயுதம் ஏந்தவும், புலிகள் போராட்டத்தை முன்னின்று நடத்தும் சூழ்நிலையும் உருவாகியது.

ஆனால், இன்று விடுதலைப்புலிகளுடன் சந்திப்புக்கள் நடத்தும் இராஜதந்திரிகளும் சரி, மனித உரிமைகள் பற்றிப் பேசும் அமைப்புக்களும் சரி தமிழ் மக்கள் சாத்வீகமாகப் போராடிய காலத்தில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்டு கொண்டதாக இல்லை. இன்றுகூட தமிழ் மக்களின் மனித உரிமைகள் எந்தளவிற்கு பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன என்பது பற்றிக்கவலை கொள்வதாக இல்லை.

பல அரசுகள் தமது நலன், தமது தீர்மானங்கள் என்பன வற்றிற்கு ஏற்ப செயற்படுகின்றன. அவை அனைத்துமே ஒடுக்குமுறை அரசுகளுக்குத் துணை போகின்றன. ஆனால், ஆயுதம் தாங்கித் தமது உரிமைக்காகவும், தமது மக்களின் பாதுகாப்பிற்காகவும் போராடும் அமைப்புக்கள் மீது மனித உரிமைகள் அமைப்புக்களும் சரி, ஒடுக்குமுறை அரசுகளுக்கு உதவும் அரசுகளும் சரி கண்டனம் தெரிவிக்கின்றன.

இங்கு நாம் மனித உரிமைகள் மீறப்படுவதை நியாயப் படுத்தவோ அன்றி மனித உரிமை மீறல்கள் பழிக்குப்பழி என்ற ரீதியில் தீர்க்க முற்படுவதையோ நியாயப்படுத்த முனையவில்லை. அரச பயங்கரவாதத்தின் மூலம் திட்டமிட்ட ரீதியில் ஒடுக்குமுறையை மேற்கொள்ளும் அரசுகள் மீது கண்டனங்கள் தெரிவிக்காதவர்கள், அவர்களுக்கு ஆயுத தளபாட உதவி மற்றும் பொருளாதார உதவிகளை வழங்குபவர்கள், தமது உரிமை கோரிப் போராடு பவர்கள் யுத்த சூழ்நிலையில் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விவகாரத்தை முதன்மைப்படுத்துவதே கவலை அளிப்பதாகவுள்ளது இவற்றின் மீதான நம்பகத் தன்மையையும், நடு நிலைமையையும் கேள்விக்குள்ளாக்குகின்றது.

ஒடுக்கப்படும் மக்களின் நடவடிக்கைகளினால் மனித உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படும்போது அதனைக் கண்டிக்க விளையும் அரசுகளும் சரி, அமைப்புக்களும் சரி இவ் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எந்த வகையிலாவது உதவிபுரிய முடியுமா? அன்றி ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைக் கான நடவடிக்கைகளை நிறுத்தினால் ஒடுக்குமுறையாளர்கள் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டுவிடுவார்களா? .

அது மட்டுமல்ல, ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் சக்திகளின் நடவடிக்கைகளில் சிலவேளைகளில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக இருப்பின் அது சந்தர்ப்பவசத்திற் கானதாகவும், தற்காப்பிற்காகவுமே இருக்க முடியும். ஏனையவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் கொண்டதாக இருக்கமாட்டாது. ஆனால், கொல்பவரைவிட தற்காப்பிற்காகப் போராடுபவர்கள் மீது குற்றம் காண விளைவது கவலையைத் தவிர வேறு எதனை அளிக்க முடியும்.

# அமெ.தமிழர் விழாவில் கலந்துகொள்ள கனடாவிலிருந்து சென்றோருக்குத் தடை

அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்ற தமிழர்விழாவில் கலந்து கொள்வதற்காக கனடா வில் இருந்து சென்ற ஈழத் தமிழர்கள் அமெரிக்க-கனேடிய எல்லையில் வைத்து அமெரிக்க அதிகாரிகளினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் போல்ரிமோர் மாநிலத்தில் இம்மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகி 5ஆம் திகதிவரை 17ஆவது தமிழர் விழாசிறப்பாக நடை பெற்றிருந்தது. வழமைபோல் இந் நிகழ்வில் கலந்துகொள்வதற்காகச் சென்ற கனேடியத் தமிழர்கள் பலரே இவ்வாறு எல்லையில் வைத்து திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர். இவர்கள் இவ்வாறு மீள அனுப்பப்பட்டமைக்கு தகுந்த காரணங்கள் அமெரிக்க அதிகாரி களினால் வழங்கப்படாத நிலையில் கனேடிய மற்றும் அமெ ரிக்கத் தமிழ் அமைப்புக்கள் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித் துள்ளன. கனடாவில் அண்மையில் வெளியிடப்பட்ட நீதிமன்ற தீர்ப்புக்கள் பொதுமக்களின் உரிமைகளை வலியுறுத்தியிருந்த போதிலும் அமெரிக்க அதிகாரி களின் இந்நடவடிக்கை குறித்து கனேடியத் தமிழர்கள் கடும் விசனத்தை வெளிப்படுத் தியுள்ளனர். இவ்வாறு திருப்பி அனுப்பப் பட்டவர்களில் பலர் நீண்ட காலமாக கனடாவில் வாழும் தமிழர்கள் என்பதும் அவர்கள் கனேடியக் குடியுரிமை பெற்றவர்கள் என்பதும், இங்கு குறிப்பிடத் தக்கது.

### -பாராளுமன்ற சுதந்திரத்தை அழித்த-

# ஆளும்கட்சி பா.உ.களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்து

(கொழும்பு)

அண்மையில் பாராளு மன்றத்தில் சண்டையிட்டு பாராளு மன்ற சுதந்திரத்தை அழித்த அரசாங்கப் பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு எதிராக தக்க நட வடிக்கை எடுக்கவேண்டுமென சிறி லங்காவின் கூட்டு எதிர்க்கட்சி, சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டாரவிடம் வேண்டு கோள் ஒன்றை விடுத்துள்ளது. இது குறித்து சபாநாயக்கருக்கு ஞாபகமூட்டும் குறிப்பில் கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளதாவது,

பாராளுமன்றத்தில் ஆர்.சம்பந்தன் அவர்களும் அத்துர லிய ரத்னதேரரும் உரையாற்று வதற்காக ஆசனத்தில் இருந்து எழுந்தபோது சந்திரசேன விஜய சிங்க, மகிந்தானந்த அலுத்கமகே மகிந்த அமரவீரமேர்வின் சில்வா, ஜீவன்குமாரதுங்க, சிறிபதி சூரியாராச்சி உட்பட பல உறுப் பினர்கள்( அரசாங்க ஆசன வரிசையில் இருந்தவர்கள்) தொடர்ச்சியாக இடையூறுசெய்து அவர்கள் மீது புத்தகங்களை வீசி யெறிந்து அதன் மூலம் அவர்களை உரையாற்றவிடாது தடுத்தனர்.

உறுப்பினர் விமல் வீரவன்ச சட்டசபை நிலத்தில் இருந்து போட்டோ எடுத்தார், சபாநாயகரின் அனுமதி இல்லாமல் 'மொபைல்' தொலைபேசி, கமெரா பாவித்தார். சட்டசபையில் இடையூறு ஏற்படக் காரணமாயிருந்தார்.

உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகே சபையில் இருந்து செங்கோலை எடுத்துக் கொண்டு ஓடினார். அதைக் கொண்டு வந்து வைக்குமாறு சொன்ன சபா நாயகரை எதிர்த்து சவால் விட்டார்.

உறுப்பினர் மேர்வின் சில்வா சபை மேசையில் கிடந்த ஒரு ஆவணத்தைக் கிழித்தார். உறுப் பினர்களான டிலான் பெரேரா, மங்கள சமரவீர, லசந்த அழகிய வன்ன, சிறிபதி சூரியாராச்சி ஆகி யோர் குமாரி கூரேயை ஏப்ரல் 22இல் பாராளுமன்றிற்கு வருகை தந்து ரவூப்ஹக்கீம் மீது பொய்யான குற்றச்சாட்டைக் கூறுமாறு தூண்டியதுடன் அவரினதும் முஸ்லிம் காங்கிரஸின் ஏனைய உறுப்பினர்களினதும் வாக்குகளை சபாநாயகர் தெரிவுவாக்களிப்பின் போது சிதறடிக்கச் செய்யலாம் என எண்ணிநடந்துகொண்டனர். மேலும் அக்மீமன தயாரத்ன தேரர் ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து புதியஉறுப்பினராகப் பதவிப் பிர மாணம் செய்துகொண்டிருந்த போது சபை நிலத்தில் வீழ்த்தி தாக்கப்பட்டதுடன் கொலன்னாவ சிறிசுமங்கல தேரரும் தாக்கப்பட்டு இருவரும் வைத்தியசாலையில் கடும் உடல் பாதிப்புகளுடன் அனுமதிக்கப்பட்டனர் என்றும் அந்தஅறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மதமாற்ற தடைச் சட்டம் குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும்

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கருத்து

மதமாற்ற தடைச்சட்டம் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கபடுவதற்கு முன்பாக அது குறித்து விரிவாக ஆராயப்படவேண்டும் என இலங்கைமனித உரிமைகள் ஆணைக் குழு கருத்து வெளியிட் டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பல் வேறு மனித உரிமைகள் தொடர் பான சட்ட வல்லுனர்களுடன் கலந்துரையாடல்களை தாம் நடத்தி வருவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மதங்களை பின்பற்றுவது தொடர்பாக ஒவ்வொரு தனி மனிதனும் கொண்டிருக்கும் உரிமைகள் மதிப்பளிக்கப்ப வேண்டும் என்றும் இதற்குத் தடையாக இந்தச் சட்டம் அமையக் கூடாது என்று தாம் எதிர்பார்ப் பதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உத்தேசிக்கப் பட்டுள்ள மதமாற்ற தடைச்சட்டம் அமுல்படுத்தப்படுவதால் தோன்றக் கூடிய பிரச்சினைகள் குறித்து மனிதஉரிமைகள் தொடர்பான பிரமுகர்கள் தமது கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது. இந்த புதிய சட்ட மூலம்தொடர்பான ஆலோச னைகள் மற்றும் தீர்வுகள் குறித்த அறிக்கை ஒன்று அடுத்தமாதம் வெளியிடப்படவிருப்பதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (32)

### -கொள்ளைச் சந்தேக நபர் மீது சித்திரவதை-

# பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குற்றமிழைத்ததாக நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

கொள்ளை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஒருவரை பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர் சித்திர வதை செய்தமை குறித்து வழக் குத்தாக்கல்செய்யப்பட்டதை யடுத்து பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி குற்றமிழைத்துள் ளதாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி யுள்ளது.

கிருல்லப்பன பொலிஸ் நிலையத்தில் தான் தடுத்து வைக்கப்பட்டபோது அங்கு கடமை யதிகாரியாக இருந்த காவல்துறை அதிகாரி கீர்தி பண்டார என்பவர் தன்னை மனிதாபிமானமற்ற வகையில் சித்திரவதை செய்த தாகவும், இதனால்தான் களு போவில வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறவேண்டி ஏற்பட்டதாகவும் முறைப்பாட்டாளர் லெஸ்லி நோர்மன் என்பவர் வழக் கொன்றை தாக்கல் செய்துள் ளார்.இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி குற்றம் இழைத்திருப்தாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. (32)

# சமாதானத்தை ஏற்படுத்துவதில் படையினருக்கு பொறுப்பான பங்கு உண்டு

*சிறிலங்கா இராணுவத்தளபதி கூறுகிறார்*

சிறிலங்காவில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் இராணுவத்தின ருக்குப்பொறுப்பான பங்குள்ளதாக சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நீடித்த யுத்தத்தின் பின்னர் இருதரப்பும், பேச்சுக்களின் மூலமே நிரந்தர சமாதானத்தை எட்ட முடியும் என்ற முடிவுக்கு வந்துள் ளன. இந்நிலையில் சமாதான முயற்சிக்காலத்தில் ஏற்படும் மிகச் சிறிய பிழைகள் கூட மிகப்பெரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம். இன்றைய நிலையில் நாட்டு மக்க ளின் நலனைக் கருத்திற் கொண்டு முடிவுகளை எடுக்கவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு தன்மீது உள்ளதாகவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார். இராணுவத்தின் ஒவ் வொரு உறுப்பினரும் ஒரே குழு வாக தலைமையின் உத்தரவுக்கு அமைய,உரிமை ஒப்படைப் புடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ளவேண்டும் எனவும் சிறிலங் காவின் புதிய இராணுவத் தளபதி கோரியுள்ளார்.

# சிறப்புற நடந்தேறிய காந்தரூபனின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு

( அலுவலக செய்தியாளர்)

மேஜர் காந்தரூபனின் 14ஆம் ஆண்டு நினைவுதினநிகழ்வு கிளிநொச்சிப் பகுதியில் உள்ள செஞ்சோலை வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது. இதில் காந்தருபன் அறிவுச்சோலைப் பிள்ளைகளும் கலந்து கொண்டு நிகழ்வினை நடாத்தியுள்ளனர். நேற்றுக்காலை 9.45 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வின் பொதுச் சுடரினை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஏற்றி வைத்தார்.தமிழீழ தேசியக் கொடியினை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஏற்றி வைத்தார். காந்தரூபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார். திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா அணிவித்தார்.

அடுத்து செஞ்சோலைப் பிள்ளைகளின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட பல கைப்பணிப் பொருட்களை நிகழ்விற்குவருகை தந்த தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் மற்றும் காந்தரூபன் அறிவுச்சோலைப் பிள்ளைகள் உட்பட அனைவரும் பார்வையிட்டனர். அடுத்து வரவேற்புரையுடன் மேடை நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதில் தலைமையுரையினை செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜெனனி நிகழ்த்தினார். சிறப்புரையினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து செஞ்சோலை பிள்ளைகளினதும், காந்தரூபன் அறிவுச்சோலைப் பிள்ளைகளினதும் கலை நிகழ்வுகள் இடம் பெற்று மாலை நிகழ்வுகள் முடிவுற்றன. (கு)





## 'மாரீசனின்' போர்க்காலக் கவிதைகள் சிறப்புற நடந்த வெளியீட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

போர்க்காலத்தினையும், அதனோடு தொடர்புபட்ட பல அம்சங்களையும், போரில் மாவீரர்களின் தியாகங்களையும் சித்திரிக்கும் போர்க்காலக் கவிதைகள், நூல் நேற்று வெளியிடப்பட்டது.

கவிஞர் மாரீசனின் கவிதைகளைத் தாங்கிய இந்நூல் நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வெளியிடப்பட்டது. மாலை 4.20 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை லெப்.கேணல் நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றினார். தொடர்ந்து மங்கல விளக்கினை புலிகளின் குரல் வானொலிப் பொறுப்பாளர் தமிழன்பன், அருட்தந்தை தேவசகாயம் அடிகளார் ஆகியோர் ஏற்றிவைக்க, அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.




தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வின் வரவேற்புரையினை அருட்தந்தை ரெஜினோல்ட் அடிகளார் நிகழ்த்த, வெளியீட்டுரையினை பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் நிகழ்த்தினார். தொடர்ந்து போர்க்காலக் கவிதைகள் நூல் வெளியீடு இடம் பெற்றது. நூலினை அருட்தந்தை ஜீவேந்திராபோல் வெளியிட்டு வைக்க, தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து நூலின் ஆய்வுரையினை கவிஞர் நாவண்ணன் அவர்கள் வழங்கினார்.

அடுத்து கவிதைகளை எழுதுவதற்கும், அதனை தொகுத்து நூலாக்குவதற்கும் ஏதுவாக அமைந்த காரணங்கள் மற்றும் நூலின் பிற அம்சங்கள் என்பனவற்றையும் தொகுத்த பதிலுரையினை நூலாசிரியரும், கவிஞருமான மாரீசன் நிகழ்த்தினார். இசை நிகழ்வும் இடம் பெற்றது. (ச)

### ஹிங்குராங்கொட...

தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை தெரிந்ததே. இதேவேளை இவ் விகாரையில் தங்கியிருந்த இரண்டு பிக்குகள் காணாமற் போயுள்ளனர்.இங்கு கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து நெல்லிவெல விபஸ்தி தேரரும் மற்றுமொருவரும் காணாமற் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டு பிக்குமாருக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளே குண்டுத்தாக்குதலுக்கு காரணமாக இருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர். காணாமற்போனோரில் ஒருவர் குண்டு வெடித்த தினம் தான் பிக்குவாக விரும்புவதாகக் கூறி விகாரைக்குச் சென்றுள்ளார்.இது வரை நடைபெற்ற விசாரணைகளிலிருந்து இக் குண்டுத் தாக்குதலை இரண்டு பேர் மேற்கொண்டிருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தல்...

நேற்று அதிகாலை 3மணிவரை மொன ராகல, மாத்தளை, பொலநறுவை, கேகாலை, காலி, மாத்தறை, கண்டி, பதுளை மொனராகல கொழும்பு அனுரா தபுரம் ஆகிய மாவட்டங்களுக்கான தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் வெளியாகியிருந்தன. அனைத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிகப்படியான வாக்குகள் பெற்றுள்ளது அத்துடன் தேர்தல் தொகுதி ரீதியான அனுராதபுரமாவட்டம் கெக்கீராவ, காலி, கெரந்தெனிய

கெக்கிராவ, அகலவத்த அக்குரச, தெவிறுவர, மாத்தறை, பெலியத்த,முல்கிரிகல,கலவான, அரநாயக்க, தங்காலை, வெலிகம, தெனியாய அக்குரச,தொகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருக்கிறது. தென்மாகாணம், அம்பாந்தோட்ட மாவட்ட முடிவுகளின் படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 141283 வாக்குகளைப் பெற்று 8 ஆசனங்களையும்,. ஐ.தே.க. 58327 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

### கல்வி...

அதற்காக நாங்கள் எல்லோரும் இணைந்து நிற்க வேண்டும். உக்கிரமான போராட்டம் நடந்த காலத்தில் கூட எமது தலைவர் கல்வியை வளர்ப்பதற்கு பல வழிகளை கையாண்டவண்ணமே இருந்தார். ஆனால் இன்று ஒரு புதிய சூழல் தோன்றியுள்ளது. அதாவது சமாதான சூழல் தோன்றியிருப்பதாக கருதப்படுகின்றது. ஆனால் அது உறுதியான சமாதானமாக இன்று இல்லை. இருந்தாலும் ஒரு யுத்தமற்ற, போர் நெருக்கடிகள் தவிர்ந்த ஒரு சுமுகமான சூழல் நிலவிக்கொண்டிருக்கின்றது. எனவே முடிந்தளவு இந்தக் காலகட்டங்களை எமது வளர்ச்சிப் போக்குக்கேற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ள நாங்கள் முனைய வேண்டும் என்ற நோக்கில் பல வேலைத் திட்டங்களை தொடங்கியிருக்கின்றோம். பல கட்டமைப்புக்களை நிறுவியிருக்கின்றோம். சர்வதேச அளவில் எங்களுடைய புலமை சார்ந்தவர்களை ஒன்று திரட்டி பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றோம்.

அதனொரு படிக்கல்லாகத்தான் இன்று புலமைசார்ந்தோர் எமது எதிர்காலக் கல்விக் கொள்கை சம்பந்தமாகவும், சமகாலக் கல்வியிலே இருக்கின்ற குறைபாடுகள் சம்பந்தமாகவும் ஆய்வுகளை செய்து தீர்வுகளை எட்டுவது இனி வரும் காலங்களுக்கு ஒரு உந்து சக்தியாக அமையும். கடந்த காலங்களில் நாங்கள் முன்கொண்டு சென்ற எங்களுடைய பிரச்சினைகள் சர்வதேச சமூகத்தால் எவ்வளவு கரிசனையோடு பார்க்கப்பட்ட தென்பது கேள்விக்குறி ஆனால் இன்று சர்வதேச சமூகம் எங்களுடைய பிரச்சினையை உன்னிப்பாக பார்க்கின்ற நிலை ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. இதை நாங்கள் பயன்படுத்திக் கொள்வோமாக இருந்தால் எமது இனத்தின் எதிர்காலத்தை இன்னும் நல்ல ஒரு நிலைக்குக் கொண்டு செல்வதற்கான படிக்கல்லில் ஏறுகின்ற முயற்சியாக இருக்கும். ஆகவே புலமை சார்ந்த நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும்.

இன்றுள்ள கல்விக் கொள்கையில் தமிழ் மக்கள் எவ்வளவு புறக்கணிக்கப்பட்டிருக்கின்றோம் என்ற முழு உண்மையும் உங்களுக்குத் தெளிவாக தெரியும் எங்களுடைய தாய்நிலம், உரிமைகள் என்பன மூடி மறைக்கப்படுகின்ற நிலை இன்றைய பாடத்திட்டங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் பின்னால் வந்த எங்களுடைய ஆசிரியர்களுக்கு, மாணவர்களுக்கு இதனை எடுத்துச் சொல்கின்ற தகுதி எந்தளவுக்கு வளர்ந்துள்ளதென்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. இருப்பினும் சர்வதேச மட்டத்திலுமே பிரபல்யமான கல்வியலாளர்கள் புலமை சார்ந்தோர் எங்களிடம் இருக்கிறார்கள். அவர்களை நாங்கள் முழு அளவில் பயன்படுத்தி அடுத்த கட்டத்தைக் கொண்டு செல்வதற்கான ஒரு வழியை ஏற்படுத்தும் மார்க்கத்தில் நாங்கள் சிந்திக்க வேண்டும். இன்று நாங்கள் கூடியிருக்கின்ற முயற்சிஒருஆக்கபூர்வமானது. ஒரு இடைக்கால நிர்வாகத்தின் தேவையை வலியுறுத்தவதாகத் தான் இது அமையும்.

இடைக்காலத்திலே தமிழர் தாயகத்தில் ஒரு கட்டமைப்பை ஏற்படுத்த நாங்கள் முடிந்தளவு முயலுவோம். என்ற நோக்கில் தான் இடைக்காலத்தீர்வை எங்களுடைய தலைவர் வலியுறுத்தியிருந்தார். ஆனால் அதுகூட இன்றிருக்கின்ற சிறிலங்காவினுடையஅரசியல் போக்குகள் அதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்வதாகத் தெரியவில்லை. இருந்தாலும் எங்களது முயற்சிகளை நாங்கள் கைவிடாது தொடர்வோம். சகல ஆற்றல்களும் எங்களிடம் உண்டு, சகல ஆளுமைகளும் எங்களிடம் . இருக்கின்றது என்பதை சர்வதேசத்திற்கு ஒவ்வொரு கட்டத்திலும் எடுத்துச் சொல்லி வருகின்றோம். இன்று எமது பாடசாலை, பல்கலைக் கழகங்கள் என்பனவற்றில் இளந்தலை முறையினரிடையே தாயக உணர்வைத் தூண்டும் வகையில் செயற்பாடுவோமேயாக இருந்தால் உருவாகப் போகும் ஒவ்வொரு மாணவருக்கும் அந்த உணர்வு இயல்பாகவே உருவாகும் ஒரு சூழல் வரும் என்றார்.

### காந்தரூபன்...

திருவுருவப்படங்கள் அமைக்கப்பட்டசிறப்பான ஓர் இடத்தில் சட்டக் கல்லூரி மாணவன் யூட் நிமலன் தலைமையில் காலை 7.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொது ஈகச்சுடரினை நோர்வே நாட்டின் அன்னை பூபதி கலைக்கூட அமைப்பாளர் ஜெயானந்தன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றி வைத்தார். இல்லக் கொடியினை சிறுவர் இல்ல சபைத்தலைவர் பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் ஏற்றி வைத்தார்.தொடர்ந்து மூன்று மாவீரர்களினதும் திருவுருவப்படத்திற்குரிய ஈகச்சுடரினை கரைச்சிப்பிரதேச செயலர். பொன். நித்தியானந்தம் ஏற்றிவைக்க மலர் மாலையினை மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன். தியாகம் அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது.தொடக்கவுரையினை அறிவுச்சோலை பொறுப்பாளர் புவியரசு நிகழ்த்தினார். சிறப்புரையினை கேணல் சூசை, விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர். அதனை அடுத்து புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது. முதலாவது அடிக்கல்லினை கப்டன் அருண் அவர்களுடைய தந்தையாரான ஏரம்பு ஐயா நாட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து கேணல் சூசை, தமிழன்பன், க.வே. பாலகுமாரன், பொன் .நித்தியானந்தன் மற்றும் வெளிநாட்டு உறவுகளாகக் கலந்து கொண்டவர்கள் அனைவரும் இவ் அடிக்கல்லினை எடுத்து வைத்தனர். தொடர்ந்து அறிவுச் சோலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (கு)

### ரி.பி.சி...

சிறிலங்கா[illegible] ஒலிபரப்பு சேவை ஊ[illegible]ஒலிபரப்பப்படும் ரி.பி.சி [illegible] சேவை தமிழ் மக்களி[illegible]குழப்பத்தையும், பீதியை[illegible]படுத்தும் வகையில்விசமப்பிரசாரத்தை மேற்கொண்டு வருவது தற்போதைய போர் நிறுத்தத்தையும், சமாதானச் சூழலையும் பாதிப்படையச் செய்து வருகின்றது என்பதை கவலையுடன் தெரிவிக்க விரும்புகிறோம்.

தமிழ்தேசவிரோத சக்திகளால் லண்டனில் இருந்து ஒலிபரப்பபடும் ரி.பி.சி ஒலிபரப்பினை சிறிலங்கா அரசு தனது அரச ஊடகமான தென்றல் ஒலிபரப்பு ஊடாக ஒலிபரப்பு செய்து வருவது தற்போது சமாதானத்தைப் பாதிக்கும் வகையில் பொய்யான செய்திகளை ஒலிபரப்புவதும் சமாதானத்தை பாதிக்கச் செய்துள்ளது.

09.07.2004 வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக் கல்லடியில் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட கிராமசேவகர் குஞ்சுத்தம்பி சிவராசாவை விடுதலைப்புலிகள் தான் சுட்டுக்கொன்றார்கள் என ரி.பி.சி சேவையூடாக பொய்யான செய்தியினை வெளியிட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அண்மைக்கால படுகொலைகளும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம் பெற்று வருகின்றன. கிராம சேவகரது படுகொலையும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம் பெற்றுள்ளன. இவ்வாறான சம்பவங்களுக்கு சிறிலங்கா இராணுவமே பொறுப்பேற்க வேண்டும். இதேவேளை உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஒலிபரப்புச் செய்யும் ரி.பி.சி போன்ற சேவைகளை சிறிலங்கா அரசு தமது ஊடகங்கள் ஊடாக ஒலிபரப்புச் செய்து தமிழ் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தும் சம்பவங்களை நிறுத்துமாறும் நாம் வேண்டுகோள் விடுப்பதுடன் தினமும் தமிழ்த் தேசியத்திற்கு குந்தகம் விளைவிற்கக் கூடிய செய்திகளைச் தென்றல் செய்தியூடாக ரி.பி.சி மூலம ஒலிபரப்புச் செய்வதை உடன் நிறுத்துமாறும் சிறிலங்கா அரசிற்கு கோரிக்கை விடுக்கின்றோம்.

இது தொடர்பாக சிறிலங்கா ஊடகத்துறை அமைச்சு கவனத்தில் எடுத்து சமாதானத்தை முன்னெடுப்பதற்கான சூழலை ஏற்படுத்துமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 11ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.